http://www.tamilarangam.net

5:1 ஆடவை2031 ரூ.5.00

# வேர்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவநேயப் பாவாணர்

# வேர்கள்

**திங்களிதழ்**

**தனிச்சுற்றுக்கு மட்டும்**


வேர் 5
மலர் 1
ஆண்டுக்கட்டணம் 60 உரூபா
வானாள் கட்டணம் 500 மட்டும்
தனி இதழ் 5 உரூபா


திராவிடக் கருத்தியல் தமிழினத்தை அணைத்துக் கெடுக்கின்ற புற்றுநோய்க் கழலையாய்ப் புடம்வைத்துத் தமிழக வாழ்வியலை நன்றாய்க் கொன்று தின்று கொண்டிருக்கிறது.
– அறிஞர் குணா


தொடர்புக்கு
அரிமாவளவன்,
10-அ3 வாத்துக்காரத் தெரு,
உறையூர்,
திருச்சி 620003
மின் அஞ்சல்
vaergall@hotmail.com


# வணக்கம்.

அரசின் அரட்டலுக்கு (பயங்கரவாதத்திற்கு) பெருமளவில் முட்டுக் கொடுப்பது அரசுச் சார்பான தொடர்பு ஊடகங்கள்தான். இசுமாயில் கையில் கன்னெய் இருந்தால் "இசுலாமியத் தீவிரவாதி இசுமாயிலிடமிருந்து வெடிபொருள் கைப்பற்றப்பட்டது!" என்று கொட்டை எழுத்தில் தினமல(ம்)ர் செய்தி போடும். கோவையில் இசுலாமியர்களைக் கொன்றதற்காக தண்டனை வழங்கப்பட்ட பிராமணத் தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்க்ளைக் குறித்துப் போடும் போது கொட்டை எழுத்தும் இல்லை, சுட்டிக் காட்டவும் இல்லை!

கன்னடப் பிராமணன் சோவுக்கு தமிழ் என்றால் கடுப்பு, விடுதலைப் போராட்டம் என்றால் கசப்பு. வடுகப் பிராமணன்தான் காந்தியைக் கொன்றான் என்றால் அவனுக்கு நமட்டுச் சிரிப்பு, ஆர்.எஸ்.எஸ், மூவண்ணக் கொடியை மூடி வைத்து விட்டது என்றால் பெரும் சிரிப்பு!

கன்னடக் களிநடிகன் இராச்குமார் கர்நாடகத்தில் எப்படி வளர்ந்தார்? 70களில் இவருடைய படங்கள் திரையரங்களில் ஓடவில்லை. அரங்குகளை விட்டுதான் ஓடியது. உள்ளே ஓடினால் மக்கள் வெளியே ஓடினர். திட்டமிட்டு ஒரு கும்பலைச் சேர்த்துக் கொண்டு தமிழ்த் திரையரங்குகளைத் தாக்க ஆரம்பித்தனர். கன்னட இன வெறியை மெல்ல மெல்ல கன்னடர்கள் நடுவில் திணித்தனர். 80களில் பிற கன்னட நடிகர்களின் படங்களையும்கூட தாக்கும் அளவிற்கு கன்னடவெறியைத் தனக்குச் சார்பாக பயன்படுத்திக் கொண்டார். இராச்குமாருக்கு அஞ்சி அங்கிருந்து ஓட்டம் பிடித்த பல கன்னடக் களிகள் தமிழகத்தில் ஆட்டம் போட ஆரம்பித்தன.

1991 கர்நாடகத்தில் நடந்த கலவரங்களை மாந்த உள்ளங்கள் மறக்க இயலுமா? அரத்தம், அரத்தம், தெருவெங்கும் அரத்தம். மாந்த ஓலங்கள் நெஞ்சைப் பிளந்தன! கற்பை இழந்த பெண்ணின் கதறல்கள் விண்ணை முட்டி எதிரொலித்தன! பிள்ளைகளைப் பறிகொடுத்த தமிழ்ப் பெற்றோர்களில் அழுகுரல்கள் விலங்குகளையும் கூட கண்ணீர் சிந்த வைத்திருக்கும். "அம்மா! அப்பா! என்ற ஓலங்கள் எங்கும் ஒலித்தன! 1000 தமிழர்களைப் பறி கொடுத்தோம்!

10 ஆண்டுகள் ஓடோடி விட்டன. வடுக்கள் மாறவில்லையே! காயங்கள் இன்னும் காயவில்லையே! அரத்த நெடி இன்னும் நெஞ்சைச் சுடுகிறதே!

யார் காரணம்? இராச்குமார், பங்காரப்பா, வாட்டாள் நாகராசுதான் என்பதை மறுப்பார் உண்டா? கடத்தப்பட்டுள்ள இக்களிநடிகருக்குத்தான் இப்போது என்னே மரியாதை?

பெரியவர், icon, கன்னட சூப்பர் ஸ்டார்! நக்கீரன் கோபால் அவன் காலைத் தொட்டு ஆசி வாங்குகிறார்.

ஆனால் எட்டு ஆண்டுகள் பொய் வழக்குகளால் மைசூர் சிறையில் சிக்கிச் சிதறுண்டு கிடக்கும் தமிழர்களோ தீவிரவாதிகள். இவர்களில் பலர் காடுகளில் சுள்ளி பொறுக்கச் சென்ற பெண்கள், வேறு சிலர் 70 அகவையைத் தாண்டியவர்கள். 14 அகவையை எட்டாத முருகன் எனும் சிறுவனும் இவர்களில் அடங்குவார்! என்ன குற்றம் செய்தார்கள் இவர்கள்?! மைசூர் சிறைகளில் எத்தனைக் கொடுமைகளை இவர்கள் தாங்க வேண்டியிருந்தது! எட்டு ஆண்டுகள் உசாவி உசாவி எதையும் பிடுங்க முடியாத நயன்மை மன்றம், "எட்டு ஆண்டுகள் நீங்கள் வீரப்பனைப் பிடிக்காமல் என்ன செய்தீர்கள்?" என்று அரசுகளைக் கேட்கிறது!

இராச்குமாரில் வீர தீரங்களைப் பட்டியலிடும் செய்தி ஊடகங்களும், "நம்பர் ஒண் நாளிதழ்"களும், துப்பறியும் விகடன்களும், கீரன்களும் இராச்குமாரின் உண்மையான கோர வரலாற்றைச் சொல்லவில்லையே!

ஆம்! கொல்லப்பட்டவனும், மிதிபட்டவனும் தமிழன்! கொன்றவன், எட் உதைத்தவன் வடுகன்! ஆட்சியும், செய்தி ஊடகங்களும் வடுகரின் கைகளில்! பொய்யும், புரட்டுமே இப்போதைக்கு அரங்கேறும்!

விழித்தெழும் தமிழனின் சிவந்த கண்கள் சினம் கொண்டு உருளும் போது பொய்மை பொசுங்கும்! ஈனர்கள் இல்லாது போவர்! –ஆசிரியர் குழு

www.tamilarangam.net

# யானைக்கொரு காலம் என்றால் வேங்கைக்கொரு காலம் உண்டு!



## வீரப்பன் விடுக்கும் 13 கோரிக்கைகள்! அரசின் பதில்கள்! இதில் நாம் அறிய வேண்டிய கருத்துக்கள்!

(வீரப்பன் இன்று விடுக்கும் கோரிக்கைகளில் பலவற்றிற்காக பன்னெடுங்காலமாக பலர் போராடி வந்துள்ளனர். அரசுகள் அப்பொழுதெல்லாம் அவற்றிற்குச் செவி மடுக்கவில்லை. ஆனால் நான்கு பேரை வீரப்பன் பிடித்து வைத்துக் கொண்டு அவர் கோரும் போது அரசு அவசர அவசரமாகச் செயல்படுகிறது. அரசுகளின் பித்தலாட்டம் அம்பலப்படுகிறது! யானைக்கொரு காலமென்றால் பூனைக்கொரு கால்லமென்பது பழமொழி! பூனைகளுக்கே காலம் என்றால் புலிகளுக்குக் காலம் பிறக்காதா? - ஆசிரியர்)

**1. காவிரியில் உடனடியாக (இடைக்காலத் தீர்ப்பான) 205 நூ.கோ.க.அடி நீரைத் திறந்துவிட வேண்டும். உடனடியாக நிரந்தரத் தீர்வும் காணப்பட வேண்டும்.**

அரசின் விடை: நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த இந்தியப் பிரதமர் தலைமையில் காவிரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. 205 நூ.கோ.க. அடி நீரைத் தருவதில் சிக்கல் ஏற்பட்டால் அது குறித்து அந்த ஆணையம் முடிவெடுக்கும். நடுவர் மன்றத்தின் தீர்ப்பு விரைவில் வரும்.

இயல்பாக ஓடிவரும் ஆற்று நீரைத் தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது. ஆற்றின் கடைமடைப் பகுதிக்குத்தான் ஆற்றின் பயன்பாடு முதலாவதாகச் சென்றடைய வேண்டும் என்பது நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம்.

கர்நாடகம் காவிரி ஆற்றின் குறுக்கே 14 அணைகளைக் கட்டிக் கொண்டது. சட்டத்திற்குப் புறம்பாகவே இந்த அணைகளைக் கர்நாடகம் கட்டியது. தமிழகத்தை ஆண்டுகொண்டிருந்த மலையாளியான எம்.ஜி.ஆரோ, கன்னடரான செயலலிதாவோ, தெலுங்கரான கருணாநிதியோ இதை எதிர்க்கவில்லை!

காவிரியில் தமிழகம் பெறவேண்டிய தண்ணீரின் அளவு 489 நூ.கோ. க. அடி நீர்! ஆனால் கர்நாடகமோ தொடர்ந்து தமிழகம் பெற வேண்டிய இந்தத் தண்ணீருக்குப் பங்கம் விளைவித்து வந்தது. இலக்கக் கணக்கான குறுக்கம் நிலங்கள் தமிழகத்தில் பாதிப்புக்கு உள்ளானது,

இதைப் பயன்படுத்திக் கொண்டு சசிகலாவின் குடும்பமும் ஸ்டாலின் குடும்பமும் பச்சை வயல்வெளிகளையும் இறால் பண்ணைகளாய் மாற்றிக் கோடிகோடியாய் குவித்துக் கொண்டன.

காவிரியில் உரிய தண்ணீர் விடக் கோரி உச்ச நயன்மை மன்றத்தில் தஞ்சை உழவர்கள்தான் வழக்கு தொடுத்தனர். அப்போது கருணாநிதி அரசு காவிரிக்காக எந்த ஒரு வழக்கும் தொடரவில்லை. இதுதான் உண்மை. பின்னர் தங்களது வேடம் கலைந்துவிடுமே என்று கருதிதான் தங்களையும் அவ்வழக்கில் இணைத்துக் கொண்டது. பின்னர் இந்திராகாந்தியின் மிரட்டலுக்குப் பணிந்து கருணாநிதி அந்த வழக்கையும் திரும்பப் பெற்றுக் கொண்டார். காவிரி மீதான தமிழகத்தின் உரிமையை இதைவிட பச்சையாக யார் காட்டிக் கொடுத்திருக்க முடியும்?

பின்னரும் சிக்கல் தொடர்ந்தது. ஆனால், வி.பி. சிங் காலத்திலும், குச்ரால் காலத்திலும் தமிழகத்திற்கு ஞாயம் கிடைப்பது போன்ற சூழல் உருவாகியது. ஆனால் அதையும் உடைத்துப் போட்டுவிட்டு வாச்பாயின் தலைமையில் ஒரு ஒன்றுக்கும் உதவாத ஒப்பந்தத்தில் கருணாநிதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

உச்ச நயன்மை மன்றத்தில் இறுதி உசாவல் வந்து, தீர்ப்பளிக்க வேண்டிய கட்டத்தில் இவரே விரும்பிச் சென்று வழக்கைத் திரும்பப் பெற்று வரலாறு காணாத இரண்டகத்தைச் செய்தார்.

தலைமையமைச்சர் தலைமையில் ஒரு காவிரி ஆணையம் அமைக்கப்பட்டது. அதில் நான்கு மாநில முதல்வர்களும் உறுப்பினர்கள். ஒரு உறுப்பினர் வராவிட்டாலும் ஆணையத்தைக் கூட்ட முடியாது.

ஆணையம் அமைக்கப்பட்ட பின்னரும் கர்நாடகம் தொடர்ந்து தன்னுடைய தான்தோன்றித் தனமான போக்கிலிருந்து எள்ளளவும் மாறவில்லை. ஆணையம் கூட்டப்பட்ட போதெல்லாம் கர்நாடக முதல்வர் வர மறுத்தார். ஆணையம் கூட்டப்படவேயில்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறுதியில் சூலை திங்களில் (2000) இக் கூட்டம் கூட்டப்பட்ட போது, கள்ளக் கணக்குகளே பட்டியலிடப்பட்டன. கருணாநிதி சொன்னார் 18 நூ.கோ.க.அடி தண்ணீர் வரவேண்டும் என்று! கர்நாடகம் சொன்னது 6 நூ.கோ.கன அடிதான் தரவேண்டும் என்று! அந்த 6யையும் விடக்கூடாது என்று கர்நாடகத்திலுள்ள கன்னட வெறி அமைப்புகள் தடுத்தன! மழை விழுந்தால் பார்க்கலாம் என்றும் அதையும் ஆகற்று திங்கள் 15வாக்கில்தான் தருகிறோம் என்றும் கருநாடக முதல்வர் பித்தலாட்டம் ஆடினார்.

இடைக்காலத் தீர்ப்பின்படிகூட, ஆகற்று 15வரை தமிழகம் பெற வேண்டிய தண்ணீரின் அளவு 91.69 நூ.கோ.க.அடி தண்ணீர். கருணாநிதி சொல்லும் 18 எங்கே? கர்நாடகம் சொல்லும் 6 நூ.கோ.க.அடி எங்கே?

இறுதியில் அந்த 6 நூ.கோ.க.அடி நீராவது வந்ததா என்றால் அதையும் கர்நாடகம் தர மறுத்தது!

சட்டம், நயன்மை, ஞாயம் என்று கடந்த ஆண்டுகளில் கர்நாடகம் எதையாவது மதித்ததா? தமிழகத்தின் ஆட்சிக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு கோழிக்கு பேன் பார்த்துக் கொண்டிருந்த திராவிடத் தீவெட்டிகளில் எவராவது இத்தனை ஆண்டுகளிலும் தமிழரின் கண்ணீரைக் கண்டனரா? அல்லது தண்ணீரைக் கொண்டு வந்தனரா?

ஈழத்தமிழரைப் பற்றி ஐரோப்பாவிலும் ஆத்திரேலியாவிலும் பேசத் துணிகிற தமிழ்த் தேசியவாதிகளாவது தஞ்சைத் தரணியில் வாடிய தமிழருக்காகக் குரல் கொடுத்தனரா? காவிரி பற்றிப் பேச வேண்டாம் என்றே மாண்புமிகு "சான்றோர்கள்" கடந்த ஆண்டு நவம்பரில் முடிவு செய்தார்கள்! இதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

**2. 1991ஆம் ஆண்டில் கர்நாடகத்தில் தமிழர்களுக்கெதிராக நடத்தப்பட்ட வன்முறையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இழப்பீடும், கர்நாடகத்தில் வாழும் தமிழருக்கு பாதுகாப்பும் அளிக்க வேண்டும்.**

அரசு பதில்: மூன்று நடுவர்களைக் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுமம் உசாவி வருகிறது. அதன் காலக்கெடு 31.05.2001 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பத்து ஆண்டுகளை அரசு எடுத்துக் கொள்கிறது. பத்து ஆண்டுகள் கடந்தும் உசாவலே முடிவுறவில்லை.

பெங்களூரை உள்ளடக்கிய 12 சட்டப் பேரவைத் தொகுதிகள் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளாகும். இது தமிழகத்தின் ஒரு பகுதியே! இருப்பினும் 1956ஆம் ஆண்டு கள்ளத்தனமாக இது கருநாடகத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது. இந்த அடிப்படைச் சிக்கலைப் புரிந்து கொண்டு மீண்டும் இப்பகுதிகளை தமிழகத்தோடு இணைக்காவிடில் சிக்கலை எக்காலத்திலும் தீர்க்க முடியாது.

அடுத்து 1991 ஆம் ஆண்டு இறுதியில் நடந்தது என்ன? காவிரி நதி நீர் ஆணையம் தனது இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட முற்பட்டபோது தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது.

1000 பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். வன்புணர்ச்சி போன்ற வன்கொடுமைகள் கன்னடர்களால் கொடூரமாக நிகழ்த்தப்பட்டன. பல ஆயிரம் கோடி பெறுமான தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இப்படி ஒரு கொடுமை நடந்தது என்பது தமிழகத்திலுள்ள தமிழர்களுக்கு திட்டமிட்டு மறைக்கப்பட்டது.

வீரப்பன் இப்போது களிநடிகரைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளதால் இப்போது இரு மாநில அரசுகளும் கொடுமை நடந்ததை ஏற்றுக் கொண்டு இழப்பீடு தரவும் முன்வருகிறது.

அப்படியானால் இந்தக் கொடுமைகளை முன்னின்று செய்தது யார் என்று கேட்பதும் பொருத்தம் மட்டுமல்ல அவசியமும்கூட. ஆயிரம் பேரைக் கொல்லக் காரணமாயிருந்தவர்களையும், பல கோடி பெறுமான சொத்துக்களை அழிக்கத் தூண்டுதலாய் இருந்தவர்களையும் சட்டத்தின் பிடியிலிருந்து எளிதாகத் தப்பிக்க விட்டுவிடலாமா?

வாட்டாள் நாகராச், கன்னடக் களிநடிகர் இராச்குமார், பங்காரப்பா மற்றும் இவர்களைப் போன்ற கன்னட வெறியர்களின் வழிகாட்டுதலின் பேரில்தான் அன்றைய கலவரம் நிகழ்த்தப்பட்டது என்பதை மறுப்பார் உண்டா?

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு ஒரு புறம் இருக்கட்டும். பாதிப்பை உண்டு பண்ணியவர்களுக்கு என்ன தண்டனை? வடுக நடிகரான ராச்குமாருக்காக இத்தனை சிரத்தை எடுத்துக் கொள்ளும் கருணாநிதி, கிருட்டிணா, செயலலிதா, ரசினிகாந்து போன்றவர்கள் அன்று ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டபோதும், சொத்துக்கள் நாசமாக்கப்பட்ட போதும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

களிநடிகனின் மூட்டு வலிக்கும் முழங்கால் வலிக்கும் மருந்து கொடுத்துவிடுகிற அரசு, அப்பாவி ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்திலிருந்து மருந்தும், குருதியும், உடுத்த துணியும் கொடுத்துவிட எத்தனை தடை விதித்தது?

ஒவ்வொரு தமிழரும் சிந்திக்க வேண்டிய ஒரு கேள்வி இது! அரச பயங்கரவாதம், வடுகத் தீவிரவாதம் ஆகியவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டிய நேரமும் இதுதான்.

இறுதியாக, 300 பேர் கொல்லப்பட்ட மும்பாய் கலவரங்களை கிருஷ்ணா ஆணையம் உசாவியது. பால்தாக்கரேயைக் குற்றவாளி என்று குற்றம் சாட்டியது. எட்டு ஆண்டுகள் கழித்தாவது அவரை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றவாளிக் கூண்டில் ஏற்ற அரசு முடிவு செய்கிறது. அப்படியானால் 1000 பேரைக் கொன்ற கயவாளிகளைக் கண்டு பிடிக்க ஏன் ஆணையம் இல்லை? அந்தக் கயவர்கள் தூக்கு மேடைக்குச் செல்வது எப்போது? யார் அந்தக் கயவாளிகள்? கொலை பாதகர்கள்?

முதலில் இராச்குமார் நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும்!

**3. கர்நாடக அரசு தமிழ் மொழியை கூடுதல் நிர்வாக மொழியாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.**

அரசு பதில்:எங்கெல்லாம் குறிப்பிட்ட ஒரு மொழி பேசுபவர்கள் 15 விழுக்காட்டுக்கும் மேலிருந்தால் அங்கு அரசு கோப்புகள் அம்மொழியில் இருக்கலாம் என்று அரசு ஆணை உள்ளது.

இரு மாநில அரசுகளும் இம்மாதிரியான பதிலைச் சொன்ன பிறகு. இக்கோரிக்கையை ஏற்க முடியாது என்று கர்நாடக முதல்வர் கிருட்டிணா அடித்துச் சொல்லிவிட்டார்.

கோபால் இரண்டாவது முறை காட்டுக்குள் சென்று திரும்பிய போது வீரப்பன் இரு கோரிக்கைகளுக்கு மட்டுமே (அதிரடிப்படை அத்துமீறல்களுக்கு இழப்பீடு, மற்றும் மைசூர் சிறையில் வாடும் சிறையாளிகளை விடுவிப்பது) அழுத்தம் கொடுப்பதாகக் கூறியதும், கிருட்டிணா நிர்வாக மொழி தொடர்பான சிக்கலைக் குறித்து குறிப்பிடும்போது, அக் கோரிக்கையை வீரப்பன் கைவிட்டுவிட்டதாகக் கருதி, "இப்போதாவது நாட்டில் அரசியலமைப்புச் சட்டம் ஒன்று உள்ளது அதற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதை வீரப்பன் புரிந்து கொண்டாரே" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அரசு பதில் என்று முதலில் குறிப்பிட்டிருக்கும் கருத்தை கர்நாடக முதல்வர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று பொருளாகிறது. இதுதான் உண்மையும் கூட.

கன்னடரான செயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் கமுக்கமாக இந்த ஆணையை வெளியிட்டார். அதாவது 15 விழுக்காடு மக்கள் ஒரு குறிப்பிட்ட மொழி பேசினால் அது இணை ஆட்சி மொழியாகும் என்று.

தமிழக எல்லையோரப் பகுதிகளில் கடந்த தேர்தலின் போது வாக்குச் சீட்டுகளில் தமிழோடு கன்னடமும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டது.

அலுவலகங்களில் கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகள் அலுவல் மொழியாக ஆங்காங்கே நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஆனால் கருநாடகத்தில் ஏறத்தாழ ஒரு கோடித் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ் எங்குமே இணை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தப் படவில்லையே. வாக்குச் சீட்டுகளில் தமிழ் இருக்கவில்லையே! கருநாடக அரசு படிப்படியாக எல்லா தமிழ்ப் பள்ளிகளையும் மூடிவிட்டதே! கருநாடகத்திலுள்ள நடுவணரசு அலுவலகத்திலும்கூட தகுதி அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட தமிழர்களைக்கூட ஓட ஓட விரட்டினார்களே!

ஒன்று வீரப்பனின் கோரிக்கையை ஏற்று கருநாடகத்தில் 15 விழுக்காட்டுக்கும் மிக அதிகமாகவே வாழும் தமிழர்களுக்காக தமிழை கருநாடகத்தின் இணை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும். அல்லது உடனடியாக தமிழகத்தில் மிகச் சிறுபான்மையினராக இருக்கும் பிறமொழியாளர்களின் ஆதிக்க நலனுக்காக செயலலிதாவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்தை உடனடியாக தூக்கியெறிய வேண்டும்.

**4. திருவள்ளுவர் சிலையை பெங்களூரில் திறக்க வேண்டும்.**

அரசு பதில்: சென்னையில். சர்வக்ஞர் சிலையையும் பெங்களூரில் திருவள்ளுவர் சிலையையும் திறப்போம்.



கன்னடப் புலவர் சர்வக்ஞர் சிலையைப் பற்றி வீரப்பன் கேட்கவில்லை. ஒன்பது ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் திருவள்ளுவர் சிலையைத் திறக்கத்தான் வீரப்பன் கேட்கிறார். கர்நாடகத்தில் வங்கக் கவிஞன் தாகூருக்குச் சிலை வைப்பதில் சிக்கல் இல்லை. மராத்தியர்களான சிவாசிக்கும், அம்பேத்கருக்கும் சிலைகள் வைப்பதில் சிக்கல் இல்லை. காசுமீரியான நேருவுக்கும் சிலை உண்டு. ஆனால் திருவள்ளுவருக்கு சிலை வைப்பதில் அவர்களுக்கு அத்தனை எதிர்ப்பு இருக்கிறது!

தமிழர்கள் நிதி தண்டி ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பாக பெங்களூரில் சிலை நிறுவ முற்பட்டபோது கன்னட வெறியர்கள் நயன்மை மன்றத்தில் தடை வாங்கிக் கொண்டு சிலையைத் திறக்கவிடாமல் செய்துவிட்டனர். கடந்த இந்த ஒன்பது ஆண்டுகளிலும் நிறுவப்பட்ட சிலையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழிவு செய்யும் விதமாக கோணிச் சாக்கினால் மூடி வைத்துள்ளனர்.

தமிழர்கள் எத்தனையோ முறை முறையிட்டும், போராடியும் அச்சிலையைத் திறக்க அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ்நாட்டிலுள்ள திராவிட ஆட்சியாளர்களும் இது குறித்து கண்டுகொள்ளவேயில்லை. போராட்டம் முற்றி கருநாடகத்திலும், தமிழகத்திலும் படிப்படியாக தமிழுணர்வு கிளர்ந்து எழுவதைக் கண்டு வேர்த்து விறுவிறுத்த திராவிடத் தில்லுமுல்லுகளெல்லாம் கூடிப்பேசி தமிழர்களின் தலைநகரில் கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் என்பாருக்குச் சிலை நிறுவ முடிவு செய்துவிட்டனர்.

இதை சென்னை மாநகராட்சியின் மேலராக இருக்கும் ஸ்டாலின் பெங்களூரிலுள்ள மணி எனும் "இடைத்தரகரின்" உதவியோடு அமைக்க முன்வந்தார். "கல்லில் வைக்காதீர்கள், வெண்கலத்தில் வையுங்கள்" கருணாநிதி அறிவுரை கொடுத்தார். சில இலக்கங்கள் அதற்காக கைமாறின!

சர்வக்ஞர் எப்படியிருப்பார் என்பதுகூட அறியாத கன்னடக்களிகளெல்லாம் கூடி ஒரு கோவணத்தையும், கைத்தடியையும், திருவோட்டையும் கொடுத்து உருவமொன்றையும் உருவாக்கிவிட்டனர்.

திருவள்ளுவரோடு ஒப்பிட இவ்வுலகில் ஒருவர் பிறந்துள்ளாரா?

திருவள்ளுவர் சிலையைத் திற என்றால், சர்வக்ஞரை இழுத்து வரச்சொன்னது யார்?

திருவள்ளுவர் சிலையைத் திறக்கவேண்டுமென்றால் சர்வக்ஞர் சிலையைத் திற என்று கட்டாயப்படுத்துவது யார்? கன்னடர்களா? கருநாடக அரசா? அப்படியானால் அவர்கள் செய்வதும் ஒரு அச்சுறுத்தல் நாடகம்தானே!

கர்நாடகத்திலுள்ள தமிழர்களுக்கு கன்னடர்களால் சிக்கல் வரக்கூடாது என்பதற்காக இப்படியொரு ஏற்பாடு என்று அவ்வப்போது சில திராவிடத் திருமுண்டங்கள் முணங்குகின்றன! கர்நாடகத்தில் வாழுகின்ற தமிழர்களை கர்நாடக அரசும், சென்னையில் குந்திக் கொண்டிருக்கும் திராவிடத் தீவெட்டிகளும் பணயக் கைதிகளாக கடந்த பல ஆண்டுகளாக வைத்துக் கொண்டு இந்த மிரட்டல் நாடகத்தைத் தொடருவதற்கு அவர்கள் என்ன உங்கள் வீட்டில் நட்டு வைத்திருக்கிற கிள்ளுக் கீரையா? கர்நாடகத் தமிழர்களைக் காக்க வேண்டிய கடமை முதலில் அரசுக்கு உண்டு. அதிலிருந்து அரசு தவறுமானல், கர்நாடகத் தமிழர்களுக்கு தங்களைத் தற்காத்துக் கொள்ளத் தெரியும்! கோபால்களும், கோயபெல்சுகளும், கோமாளிகளும் குதிக்கத் தேவையில்லை!

ஒன்றை இவர்கள் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்! கர்நாடகத்தில் ஒரு கோடித் தமிழர்கள் உள்ளனர். 1956ல் திராவிடங்கள் இந்தியனுக்கு வாலை ஆட்டிக் கொண்டு போட்ட கோடுதான் இன்றைய கருநாடகம் எனும் மாநிலம். ஆனால் அது உண்மையிலேயே எந்த வடுகனுக்கும் சொந்தமில்லாத மண்! அது பச்சைத் தமிழ் மண்! "சர்க்கரை" என்று தாளில் எழுதி வைத்து நக்கினால் கன்னடனுக்கு வேண்டுமானால் இனிக்கலாம். தமிழருக்குச் சொந்தமான மண்ணை கன்னடன் என்றைக்கு ஆனாலுல் விட்டுவிலகியே தீர வேண்டும். இனிய எம் தமிழ் மண்ணை என்றைக்கு ஆனாலும் தமிழன் மீட்டெடுத்தே தீருவான்!

அன்றைக்கு வள்ளுவர் சிலை மட்டுமல்ல எங்கள் பாவாணருக்கும், மறைமலை அடிகளுக்கும், பாவேந்தருக்கும் ஈழத்து எல்லாளனுக்கும் சிலை சமைத்தே தீருவோம். இமயத்தில் கல்லெடுத்து கனக விசயனின் வடுகத் தோள்களில் ஏற்றி வந்ததுபோல பொதிகையில் கல்லெடுத்து வடுகரின் தலையிலேற்றியே சிலை சமைப்போம். இழந்த மண்ணை மீட்டெடுத்து அதை அங்கேயே அமைப்போம்.

இதற்கிடையில் சென்னையில் சர்வக்ஞருக்கு சிலை அமைத்தபின்னர்தான் வள்ளுவரின் சிலை திறக்கப்படும் என்றால், கருணாநிதி அரசு சுக்கு நூறாய்ச் சிதறி விழும்! தெய்வப் புலவர் திருவள்ளுவரை எவராவது அவமானப்படுத்த எண்ணினால் பத்து கோடித் தமிழ் மக்களின் சாவம் அவரை முட்டி மோதிச் சிதறிச் சாகடிக்கும்! இது இத் தமிழ் மண்ணின் மீது ஆணை! தாய்த் தமிழின் மீது ஆணை! தன்னலமற்ற ஆயிரமாயிரம் தமிழ்ப் போரராளிகளின் சாவம் இதுவே!

**5. அதிரடிப்படை அத்துமீறல்களை உசாவ அமைக்கப்பட்ட சதாசிவன் ஆணையத்தை தொடர்ந்து நடத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடும் அளிக்க வேண்டும்.**

அரசு பதில்: நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதிரடிப்படைகள் நடத்திய அத்துமீறல்கள் என்ன கொஞ்சநஞ்சமா? எத்தனைப் பெண்கள் இக்கொடியவர்களால் வன்புணர்ச்சிக்கு ஆளானார்கள்? வன்கொடுமைக்கு உள்ளானார்கள்? உசாவல் என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்ட எத்தனை பேர் கொன்று தூக்கியெறியப்பட்டார்கள்! எத்தனைவிதமான உடலூறுகள் அம் மக்களுக்கு இழைக்கப்பட்டன? நாசிப் படை முகாம்களில்கூட யூதர்களுக்கு இத்தனைக் கொடுமைகள் நடந்திருக்குமா என்பது ஐயமே! போசுனியாவில் இத்தனைப் பெண்கள் இப்படி வல்லுறவுக்கு ஆளாயிருப்பார்களா என்பதும் ஐயமே!

இத்தனைக் கொடூரங்கள் நடந்த பின்னரும் அதை உசாவ அமைக்கப்பட்ட ஆணையம் தடுத்து நிறுத்தப்படுகிறது. மாந்த உரிமை அமைப்புக்களின் உசாவல்களும் தடுக்கப்படுகின்றன!

அப்படியானால் இங்கு நடப்பது காட்டாட்சிதானே! துமுக்கியும் சட்டமும் உன் கைகளில் இருந்தால் மக்களைக் காக்கை குருவிபோல சுட்டுத்

www.tamilarangam.net

தள்ளுவதும், எரித்துப் பொசுக்குவதும்தான் அரசு அமைப்புக்களின் கடமை என்றால் மக்கள் ஒருங்கிணைந்து கிளர்ந்தெழுந்தால் என்ன ஆகும் என்பதை அரசு அமைப்புக்கள் சுவைத்தே ஆக வேண்டும்!

பஞ்சாப் மாநிலத்தில் கில் எனும் கொடியவனின் தலைமையில் அரசு படைகள் ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று குவித்துவிட்டு தீவிரவாதத்தை நசுக்கிவிட்டோம் என்று பெருமிதம் கொள்கிறது! தருமபுரி பகுதியில் தமிழக அரசும் அம்மாதிரி ஒரு முயற்சியில் இறங்கி கொன்று குவித்தது. மக்களுடைய உள் ஆற்றல் என்ன என்பதை இன்னும் வடுக ஆட்சியாளர்கள் உணரவில்லை! வரலாற்றைப் படிக்கும் பழக்கம் அவர்களுக்கு இருக்கவுமில்லை!

தகரிகள், துமுக்கிகள், அடக்குமுறைகள் கொண்டு மக்களின் விடுதலைத் தாகத்தையும், உள்ளாற்றலையும் ஒடுக்கி அழித்துவிட்டதாக வரலாற்றில் ஒரு சான்று கிடையாது!

**௭. கர்நாடகச் சிறையில் வாடுபவர்களை விடுவிக்க வேண்டும்.**

அரசு பதில்: தடா குற்றம் நீக்கப்படுகிறது. சிறையில் வாடுபவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

அரசின் பித்தலாட்டம் அப்பட்டமாக இதிலும் வெளிப்படுகிறது. களிநடிகர் இராச்குமார் சிறை வைக்கப்பட்ட நாளிலிருந்து இந்த கர்நாடகச் சிறையில் வாடும் சிறையாளிகளுக்கு செய்தி ஊடகங்களும், அரசு அரட்டலாளிகளும் கொடுக்கிற பெயர் "வீரப்பன் கூட்டாளிகள்"! அதாவது மைசூர் சிறையில் வாடும் அத்தனை பேரும் அரட்டலாளிகள் (பயங்கரவாதிகள்) என்று திட்டமிட்டே செய்தி பரப்புகிறார்கள்.

1998ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வேர்கள் இதழுக்கு மைசூர் சிறையிலிருந்து சிறையாளிகளில் சிலர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி:

"எங்கள் வாழ்க்கையை கர்நாடக காவல்துறை கெடுத்தது. செயலலிதா கெடுத்தார். இப்போது கருணாநிதியும் கர்நாடக முதலமைச்சர் பாட்டீலும் சேர்ந்து கெடுக்கிறார்கள். நீதிமன்றம் எங்களை விடுதலை செய்ய விரும்பினாலும் கர்நாடக அரசும், கருணாநிதியும் சேர்ந்து எங்கள் வாழ்வில் விளையாடி வருகிறார்கள். எங்களுக்கும் வீரப்பனுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இது எங்கள் ஊரிலுள்ள எல்லா மக்களுக்கும் தெரியும். கர்நாடக காவல்துறை இனவெறி கொண்டு எங்களையும், எங்கள் குடும்பத்தாரையும் முழுவதுமாக நாசம் செய்து விட்டது. நரக வேதனையில் இருக்கிறோம். நாங்கள் எல்லோரும் தமிழர்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறோம். எங்கள் மீது பொய் வழக்கு போட்டு இப்போது எட்டு ஆண்டுகள் செய்வதறியாமல் இங்கு கிடக்கிறோம்."

தடா சட்டம் என்றைக்கோ ஒழிந்து போனது. ஆனால், மைசூர் சிறையில் வாடும் தமிழர்கள் மீது மட்டும் தடா சட்டம் திரும்பப் பெறப்படாமல் அவர்களை வதைத்தது. என்ன ஞாயம் அது?

பத்து ஆண்டுகள் சிறையில் கொத்தடிமைகளாய் கொடுமைகளுக்கு உட்படுத்தப் பட்டார்களே! பலர் வீரப்பனைப் பார்த்ததுகூட கிடையாது. அத்தனை பேருடைய குடும்பங்களும் சிதைந்து சின்னாபின்னமாகிப் போனது!

குற்றங்கள் மெய்ப்பிக்கப்படாமல் சிறையிலிருந்து வெளிவந்த பலர் கட்டுப்பாட்டுப் பிணையில்தான் வெளிவந்தனர். ஒவ்வொருநாளும் காவல் நிலையங்களில் போய் கையெழுத்து போட்டுவிட்டுதான் அவர்கள் வரவேண்டியிருந்தது.



மைசூர் சிறையில் வாடும் இவர் பெயர் முருகன். 14 அகவையில் இவரை பிடித்துக் கொண்டு போனார்கள். இவர் மீதும் தடா பாய்ந்தது. தனது எதிரிகளுக்கும்கூட இப்படி ஒரு கொடுமை வரக்கூடாது என்கிறார் இவர்.

வீரப்பன் கேட்பதோ, அரசு போட்ட அத்தனைப் பொய் வழக்குகளையும் திரும்பப் பெற்று அத்தனை பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதுதான்! ஆனால் கர்நாடக அரசு பித்தலாட்டம் செய்கிறது. அதாவது, சிறையில் இருப்பவர்கள் சொந்தப் பிணையில் போகலாம் என்று அறிவித்தது. வீரப்பன் என்ன ஏமாறுவதற்கு கன்னடக் களியைத் தின்று மண்டை மரத்துப் போனவரா?

சிறையில் இருப்பவர்கள், கட்டுப்பாட்டுப் பிணையில் உள்ளவர்கள் என அத்தனை பேர் மேலுள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறு! என்கிறார்.

வீரப்பனுக்குக் கிலுகிலுப்பைக் காட்டி கன்னடக் களிநடிகர் இராச்குமாரை மீட்டுவிடலாம் என்கிற கன்னடக் கனாக்களுக்கு மண்ணையள்ளிப் போட்டுவிட்டார் வீரப்பன்.

இந்தியாவில் புனையப்பட்ட மொத்த தடா வழக்குகளில் 100க்கு 98.5 வழக்குகள் பொய் வழக்குகள் என்று தள்ளுபடி செய்யப்பட்டன!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**7. கொல்லப்பட்ட தொல் தமிழர்களுக்கு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும்.**

அரசு பதில்: கொல்லப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் பெற்ற பின்னர் உரிய இழப்பீடு கொடுக்கப்படும்.

*கருணாநிதியுடைய ஆட்சியில், செயலலிதாவுடைய ஆட்சியில் கொல்லப்பட்ட தொல் தமிழர்களின் எண்ணிக்கை என்ன?*

*கொடியங்குளத்தில் தொல்தமிழருக்கு எதிராக கொலை வெறித்தாண்டவம் ஆடியது யார்? மேலவளவில் வெட்டிச் சாய்க்கப்பட்ட தொல் தமிழர்களின் எண்ணிக்கை என்ன? வெட்டிச்சாய்த்த சாதி வெறியர்கள் வெளிப்படையாக ஊரைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள். சாதி வெறி ஒன்றையே தமிழர்கள் நடுவில் விதைத்து வாக்கு அறுவடை செய்யும் வஞ்சகத் திராவிடர்களிடம் என்ன நீதி கிடைக்கும்? என்ன ஞாயம் பிறக்கும்?*

**8. நீலமலைத் தேயிலையை குறைந்துபட்ச கொள்முதல் விலையை ரூபாய் பதினைந்து என்று அறிவிக்க வேண்டும்.**

அரசு பதில்: ஆயிரம் காரணங்களைச் சொல்லிய பிறகு, ரூ 9.50 என்று இப்போது கொள்முதல் செய்கிறோம் என்கிறது.

*தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த நாட்களில் பல்வேறு உத்திகளை அரசுக்கு முன்மொழிந்து கொள்முதல் விலையை அதிகரிக்க கேட்டார்கள். நடுவணரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் சார்ச் பெர்ணான்டசு வந்தபோது, "படைஞர்களின் பயன்பாட்டிற்கு நீலகிரித் தேயிலையை பயன்படுத்த" கேட்டுக் கொண்டார்கள். அதுகூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. தரமான நீலமலைத் தேயிலை நமக்குக் கிடைக்கும் போது நாம் இன்னும் அயல்நாட்டுத் தேயிலையை இறக்குமதி செய்து வருகிறோம். இப்படி முன்னுக்குப் பின் முரணாக அரசின் செயல்பாடுகள் இருக்கும்போது உள்நாட்டுத் தொழிலாளர்களின் நலன்கருதி என்றைக்கு இந்த அரசு செயல்படப் போகிறது?*

**9. தமிழ்நாட்டுச் சிறையிலுள்ள ஐவர் விடுதலை செய்யப்பட வேண்டும்**

அரசு பதில்: பரிவுடன் நோக்குகிறோம்.

*"தீவிரவாதிகள்" என்று அரசும், வடுகப் பிராமணர்களும், திராவிட அரசியலார்களும் முத்திரை குத்தியிருக்கிற இந்த ஐவரும் இவர்களைப் போன்ற இன்னும் பலரும் தோன்றக் கரணியம் என்ன?*

*மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அரசு மக்கள் நலனைத் தவிர மற்றெல்லாவற்றிலும் கவனம் செலுத்துகிறது!*

*அரசியலாளிகள் செய்கிற அட்டூழியங்கள் இன்று மக்களால் சகிக்க இயலாத ஒரு நிலையை எட்டிவிட்டது. கரைவேட்டிகளும் கட்சித் தலைவர்களும் செய்கிற ஊழல், முறைகேடுகள், சட்டத்தை வளைக்கும் பாங்கு அத்தனையும் இன்று மக்களின் கோபத் தீயில் பற்றியெரியும் நிலையை எட்டியுள்ளது..*

*மக்களைக் காக்கவேண்டிய காவல்துறை மக்களை வதைக்கவும் கொல்லவுமே செயல்பட்டு வருகிறது.*

*சட்டங்களை முதலாவது மிதித்து உடைக்கிற தீய ஆற்றல்களாக அரசு அதிகாரிகள், அரசியலாளிகள், காவல்துறை, நீதித்துறை என்று உருவெடுத்து நிற்கிறது. குமுகம் இச்சீர்கேட்டை எத்தனைக் காலம்தான் ஏற்றுக் கொண்டு இருக்கும்?*

*போராளியும் தாயின் வயிற்றில் 10 மாதம்தான் இருக்கிறார்! பிறக்கும்போதே போராளி துமுக்கியும் கையுமாய் பிறக்கவில்லை. அவர்களுக்கும் பற்று, பாசம் உண்டு! சொல்லப்போனால் அவர்களுக்குத்தான் சராசரி மனிதனைவிட அதிக பற்று உண்டு. எனவேதான், குமுகத்தில் பிற மனிதருக்கு இழைக்கப்படும் கொடுமைகள், நீதியற்ற அதிகார அமைப்பு, ஞாயமற்ற குமுக அமைப்பியல் அவரைக் குத்துகிறது. மனச்சான்றுள்ள, குமுகப் பொறுப்புள்ள எந்த ஒரு நல்ல மாந்தனும் இன்றைய குமுக அமைப்பை மாற்றியமைக்க ஆயுதம் ஏந்தத்தான் செய்வான்! போராளியை உருவாக்குவது நீதியற்ற சமூகம்தான்! வேர்களுக்கு எருவிட்டுவிட்டு விளைவுகளைத் திண்டுவானேன்?*

*ஒரு போராளியை சிறையில் அடைத்துவிட்டால் ஒன்பது போராளிகளை குமுகம் உருவாக்கும்! ஒரு போராளியைக் கொன்று விட்டால் அவன் சிந்திய ஒவ்வொரு துளி அரத்தத்திலிருந்தும் புதிய ஒரு போராளி புது வேகத்துடன் முளைத்துவிடுகிறான்!*

*அரசு விடுவிக்க முன்வரும் இந்த ஐந்து போராளிகளில் நால்வருக்கு ஏற்கெனவே, பிணை கிடைத்து ஒரிரு மாதங்கள் ஆகிவிட்டன. தடுப்புக்காவல் சட்டமான தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவர்கள் தளைப்படுத்தப் பட்டதால் ஓராண்டுகால நிறைவை அவர்கள் எதிர்நோக்கியிருந்தார்கள். அந்த நாளும்கூட வரும் நவம்பர் திங்களில் வருகிறது.*

*இப்போது அரசே ஏதோ தாராள குணத்தோடு முன்வந்து இவர்களை விடுவிப்பது போன்ற ஒரு நாடகத்தை ஆடுகிறது.*

**10. மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 150 வழங்கப்பட வேண்டும்.**

அரசு பதில்: இப்போது ரூ. 74.62 பெற்றுவருகிறார்கள். குடியிருப்பு ஏந்து, மருத்துவ ஏந்து போன்ற சில சலுகைகளைக் கூட்டினால் ரூ.139 ஆகிவிடுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசு விடும் அடுத்த சரடு இது! வீரப்பன் சொல்லுகிற ஊதியத்தில் பாதிகூட வழங்கப்படவில்லை. ஆனால் லொட்டு லொசுக்கு என்று எல்லாவற்றையும் சேர்த்து 139 என்று கணக்கு காட்டுகிறது அரசு.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் இன்று நேற்று தொடங்கப்பட்டதல்ல! தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் நாம் நினைப்பது போல அது ஒரு தொழிலாளர் போராட்டம் மட்டுமல்ல! தேயிலைத் தோட்டச் சிக்கலும் தமிழ் தேசிய விடுதலைச் சிக்கல் என்பதைப் புரிய வேண்டும்.

இலங்கையிலுள்ள சிங்களப் பேரினவாத அரசு தன்னுடைய நாட்டின் பயன்பாட்டிற்காக மிதிவண்டிகளை இறக்குமதி செய்கிறது. சென்னையில் உற்பத்தியாகும் மிதிவண்டிகளை இலங்கை பெற்றுக் கொண்டால் ஏற்றுமதி இறக்குமதிச் செலவினங்கள் குறைவுதான். ஆனால் இலங்கை அரசு சென்னையிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக லண்டனிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. ஒட்டாண்டி நாடான இலங்கைகூட தமிழர்களின் தலைநகரான சென்னைக்குத் தன்னுடைய பணம் சென்றுவிடக்கூடாது என்பதில் கருத்தாயிருக்கிறது.

ஆனால் தரமான தேயிலையை தமிழகத்தின் நீலமலையில் தமிழர்கள் விளைவித்தாலும் இந்திய அரசு இலங்கையிலிருந்து தொடர்ந்து தேயிலையை இறக்குமதி செய்கிறது. நீலமலைத் தேயிலையை அழிக்க இந்திய வல்லாதிக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிகளில் ஒன்றுதான் இலங்கையிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்யும் கயமையின் பின்னணி!

நீலமலைத் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் பகராளிகள் சில மாதங்களுக்கு முன்பாக நடுவணரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் சார்ச் பெர்னான்டசிடம், இந்தியப் படைஞர்களின் பயன்பாட்டிற்காக நீலமலைத் தேயிலையைக் கொள்முதல் செய்யச் சொன்னபோதும் அது செவிடன் காதில் ஊதியச் சங்காகத்தான் ஆனது!

தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் நாள் ஊதியம் ரூ. 150 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்றால் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலை நிறுத்தப்பட வேண்டும். இலங்கைத் தேயிலையின் இறக்குமதியை நிறுத்துவதற்கு இந்திய வல்லாதிக்க அரசு தமிழ்நாட்டின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். வெறிநாயிடம் அன்பையும் அக்கறையையும் தேடுவது மடமையே!

**11. காவிரி நதி நீர்ச்சிக்கலை உலக நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.**

வீரப்பன் இவ்வாறு அறிவித்திருப்பதை ஏதோ அவர் அறியாமல் பேசுவது போல மெத்தப்படித்துவிட்டதாக எண்ணிக் கொள்ளும் வடுகக் கோமாளிகள் கூறுகிறார்கள். வீரப்பனின் இந்த அறிவிப்பு பலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருப்பது திண்ணம்.

வழக்கமாக நதிநீர்ச் சிக்கல்களை இரு நாடுகள்தான் உலக நயன்மை மன்றத்திற்குக் கொண்டு செல்லும். கர்நாடகம் இதுவரை தனியொரு நாடு போலவே செயல்பட்டு வருவது யாவரும் அறிந்ததே! ஆனால் 'ஒரு நாடு' என்கிற போர்வையில் தமிழகத்தின் நலன்கள் தொடர்ந்து காவு கெடுக்கப்பட்டே வந்தது!

காவிரி நதி நீர்ச்சிக்கலை உலக நயன்மை மன்றத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற வீரப்பனின் ஆணையில் "இந்தியாவும், கர்நாடகாவும் இதுவரை தமிழகத்தை ஒரு தனி நாடாகவே நடத்தி வந்துள்ளன! நசுக்கி வந்துள்ளன! அதற்கு இந்தியத் தேசியம் எனும் ஓட்டைப் போர்வையை போர்த்தி குந்த வைத்துள்ளது!" வீரப்பன் சொல்வது என்னவென்றால், "ஓட்டைப் போர்வையைத் தூக்கியெறி! தனிநாடுதான் என்பதை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளலாம்!" என்பதுதான் பரிந்துரை.

இரு நாடுகளுக்கு இடையே போர் நடக்கும் போதுகூட நதி நீரை எந்த ஒரு நாடும் தடுத்து நிறுத்த முடியாது! ஆனால் ஒரு நாடு என்கிற போர்வையில் கர்நாடகம் பல இலக்கம் உழவர்களின் வாழ்வையும் வயல்களையும் காயப் போட்ட கொடுமையை எத்தனைக் காலம்தான் வாய் பொத்தி ஏற்றுக் கொள்ளவேண்டும்?

**12. 12ஆம் வகுப்புவரை தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.**

அரசு பதில்: வழக்கு உச்ச நயன்மை மன்றத்தில் உள்ளது!

திராவிடங்கள் அத்தனையுமே, தமிழின் பேரைச் சொல்லியே தமிழர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி ஏறியவை! ஆனால், நடைமுறையில் தமிழை அழிக்கவே அத்தனைத் திராவிடங்களும் முயன்றன என்பது மறுக்க இயலாத உண்மை!

கன்னடப் பெரியார் இராமசாமி, "ஆங்கிலம்தான் வீட்டு மொழியாக, ஆட்சி மொழியாக, தெரு மொழியாக ஆகவேண்டும்" என்றார். தமிழைக் காட்டு விலங்காண்டிகளின் மொழி என்று திட்டித் தீர்த்தார்.

பெரும்பான்மைத் தமிழர்களின் நலனுக்காக 100 தமிழறிஞர்கள் சாகும் வரை உண்ணா நோன்பு என்று அறிவித்தபோது, தெலுங்கினத் தலைவர் கருணாநிதி, சிறுபான்மையினர் நலன் குறித்துப் பேசி கல்விக் கடை விரித்திருக்கும் வணிகக் கும்பலை உசுப்பி விட்டார்!

தமிழ்வழிக்கல்வி குறித்த பரிந்துரையை தமிழகச் சட்டமன்றத்தில் சட்டமாக்காமல், ஆணை என்று அனுப்பி மறுபுறத்தில் கல்வி வணிகர்களைக் கொண்டு நயன்மை மன்றத்தில் வழக்கு தொடர வைத்தார். வணிகர்கள் வெற்றி பெற்றனர்.


தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது உச்ச நயன்மை மன்றத்தில் வழக்கு உள்ளதாக வழவழா கொழகொழா என்று பேசுகிறார்.

தமிழ் வழிக் கல்விக்கானப் போராட்டம் நடந்து கொண்டு இருக்கும்போதே கமுக்கமாக 469 ஆங்கிலப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு அரசு இசைவு கொடுத்துள்ளது.

சென்னையிலுள்ள அண்ணா சாலையில் ஆங்கிலப் பெயர்ப்பலகைகளில் கரி பூசும் போராட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஈடுபட்டனர். கருணாநிதி குடும்பத்தின் சன் தொலைக்காட்சியின் அலுவலகத்திலும் ஆங்கிலப் பலகை இருந்தது. அழிக்க முற்பட்ட ஒரு காலூனமுற்றவரை உள்ளே இழுத்துச் சென்று உதைத்த "தமிழப் பற்றாளர்கள்" இவர்கள். காவல்துறையை ஏவிவிட்டு அவர்மீது மேலும் வழக்குகளைப் போட்ட இரண்டகர்கள் இவர்கள்!

இவர்தான் "தமிழ் இனத் தலைவர்"! தமிழைக் கொன்றொழிக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெந்தச் சிந்தனையும் இவருக்கும், இவருடைய குடும்பத்திற்கும், இவருடைய கும்பலுக்கும் கிடையாது! தமிழ் பற்றி இவர்கள் பேசுவதெல்லாம் வாக்குகளைத் திருட மட்டும்தான்!

தமிழ்நாட்டில் தெலுங்கர்கள் உள்ளிட்ட மாற்றினத்தாரின் ஆதிக்கம் முற்றிலுமாக அகற்றப்பட்டாலேயே தமிழ் மொழியும், தமிழினமும் தழைக்கும்!

**13. வாச்சாத்தியில் கற்பழிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.**

பாலியல் வல்லுறவு கொள்வது காவல்துறையின் கடமை! அதற்கு இழப்பீடு செலுத்த வேண்டியது அரசின் தலையெழுத்து! இழப்பீட்டுத் தொகை யாருடையது? மக்களுடைய வரிப்பணம்! குற்றம் செய்தவன் ஒருவனிருக்க இழப்பீடு அடுத்தவரின் மடியிலிருந்து பறிக்கப்படுவது என்ன ஞாயம்?

சோனியா காந்தி மூளியர்க்கப்பட்டுவிட்டால் மட்டும் 26 பேருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கத் துணிகிற "சட்டத்தின் ஞாயங்கள்" எங்கள் பெண்களின் மானம் சூறையாடப்படும்போது மட்டும் பம்மிக் கொள்கிறதே ஏன்?

பெண்களோடு வல்லுறவு கொண்டவன் யார் என்று கண்டுபிடி! அவனைத் தண்டி! இழப்பீட்டுத் தொகையை குற்றவாளியிடமிருந்து அவனுடைய சொத்துக்களை இணைத்துப் பெற்றுக் கொடு! அதுதான் ஞாயம்.
ஆறு கோடித் தமிழரின் நலனை முன்னிட்டு வீரப்பன் மனதில் பட்டது மேற்குறிப்பிட்ட 13 கோரிக்கைகளாக இருக்கலாம். தமிழரின் கோரிக்கைகள் இன்னும் பல உள்ளன. அவற்றில் சில இதோ!

அ. இது தமிழ்நாடு, தமிழரின் நாடு! ஆனால் இங்கு மொழி குறித்தும், இனம் குறித்தும் பேச, எழுத, செயல்பட உரிமையில்லை! சொந்த நாட்டு மக்களின் உரிமையை நசுக்க தெலுங்கரான கருணாநிதி தமிழ்நாடு காவல்துறையில் க்யூ பிரிவு எனும் சிறப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தினார். சொந்த நாட்டின் மக்களின் மொழி உரிமையையும், இன உரிமைகளையும் நசுக்க உலகில் வேறெங்கும் இப்படியொரு அமைப்பு உண்டா என்பது தெரியவில்லை! தமிழ்நாட்டில் தமிழரை நசுக்க உருவாக்கப்பட்ட இச் சிறப்புப் பிரிவு கலைக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாட்டுக்குள் பணியாற்றும் ஆட்சிப் பணி, மற்றும் காவல் பணி (ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்) அதிகாரிகள் அனைவருமே தமிழராகவேயிருக்க வேண்டும். காவல்துறையினுடைய உயரதிகாரப் பிரிவுகள் அனைத்துமே வழக்கமாக தமிழரல்லாதவராலேயே நிரப்பப்பட்டும் திணிக்கப்பட்டும் கிடக்கிறது. தமிழ் அதிகாரிகளின் பதவி உயர்வுகளுக்கு முட்டுக் கட்டைகள் போடப்படுகின்றன. எனவே, மாற்றினத்தார் தமிழ்நாட்டிற்குள் ஐ.ஏ.எஸ், மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளாக் வரக்கூடாது!

இ. இன்று வந்தேறித் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் மற்றும் மார்வாடிகள் உள்ளிட்ட மாற்றினத்தாரிடம் குவிந்து கிடக்கும் தமிழ் நிலம் முற்காலத்தில் தமிழரிடமிருந்து களவாடப்பட்ட மரபுரிமைச் சொத்து. தமிழ்நாட்டுக்குள் உள்ள நிலங்கள் அத்தனையும் தமிழரிடமே திருப்பித்தரப்பட வேண்டும். சொத்துரிமை இழப்புதான் தமிழ்ச் சாதிச் சண்டைகளுக்கான தொடக்கம். தமிழரின் சொத்துரிமை மீட்பின் மூலம் தமிழரின் புறப்பகையும் அகப்பகையும் ஒருங்கே அழிந்தொழியும். "சாதி மதப் பித்தொழிந்து..." என்று பேருந்துகளில் எழுதிப் போட்டால் சமத்துவம் பிறக்காது! எங்கள் நிலத்தைத் திருப்பிக் கொடு, நாங்கள் பிரித்துக் கொள்வோம்.

ஈ. தமிழில் படித்த தமிழருக்கே அரசு மற்றும் தனியார் அலுவல்களில் வேலைவாய்ப்பு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

அறவழியில் கேட்கும் ஞாயமான கோரிக்கைகளுக்கு உரிய நேரத்தில் அரசு செவி சாய்க்குமாயின் வீரப்பனின் இம்மாதிரியான அதிரடிச் செயல்பாடுகளையும் தடுத்துவிடலாம். அரசும், மக்களும் நிம்மதியாக இருக்கலாம். ஆனால், வன்முறையை நம்புகிற அரசுகள் இக்குரலுக்குச் செவி மடுக்குமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**அக்டோபர் 28 காரிக்கிழமை திருச்சியில்**
**தமிழர் பெருவிழா!**
**இன்றே குறித்துக் கொள்ளுங்கள்!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எது வெட்ட வேண்டிய நச்சுச் செடி?

28.08.2000 நாளிட்ட தினமணியின் நடுப்பக்கக் கட்டுரையின் தலைப்பு "வெட்ட வேண்டிய விசச் செடி" கட்டுரையைக் கக்கியிருப்பவர் குட்டி எனப் பெயர் கொண்ட ஒரு நாமக்கட்டி! இவர் பார "தீய" சனதாக் கட்சியின் முன்னாள் இராணுவத்தினரின் அணித் தலைவராம்! இந்தி நாட்டின் படைகள் எந்த அளவிற்கு காவியில் தோய்ந்து கிடக்கிறது என்பதற்கு இவரே ஒரு சான்று!

வீரப்பனின் அதிரடித் தாக்குதல் இவருடைய அடிவயிற்றைக் கலக்கி அதைக் கட்டுரையாய் கக்கியிருக்கிறார். வீரப்பனைச் சாடும் சாக்கில் விடுதலைப்புலிகள், வடகிழக்கு இந்தியாவில் போராடும் போராளிகள், உல்ஃபா போராளிகள், தெலுங்குப் போராளிகள், தேசிய இன விடுதலைக்காகப் போராடும் போராளிகள் அனைவரையும் வெட்ட வேண்டிய நச்சுச் செடிகள் என்று எழுதியிருக்கிறார்.

இந்திய விடுதலைப் போராட்ட மாவீரன் வாசுதேவ் பல்வந்த் பட்கேவை ஆங்கில அரசு பிடிக்க இயலுமென்றால் ஏன் வீரப்பனைப் பிடிக்க முடியாது என்பது இவருக்கு தலையைக் குடையும் வினாவாம்! பாவம் வற்றிப்போன வடுகப் பிராமண மூளைகளுக்கு கரந்தடிப் போரின் நெளிவு சுளிவுகள் புரியவா போகிறது?

காந்தி எனும் இந்தி தேசியப் பற்றாளரையே சுட்டுப் பொசுக்கிய காவிக் கும்பலை என்ன செய்வது?

குசராத்திலும், மும்பாயிலும், நாசிக்கிலும், சூரத்திலும் இன்னும்பல இடங்களிலும் நடுத்தெருவிலேயே கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து அப்பாவி இசுலாமியப் பெண்களை கதறக் கதறக் கற்பழித்த கயவர் கூட்டத்தை என்ன செய்வது?

ஸ்டெயின்ஸ், அவருடைய குழந்தைகள், சங்கர் குகா நியோகி போன்ற ஒடுக்குண்ட மக்களின் காவலர்களைக் எரித்தும், சுட்டும் கொன்ற கொடியவர்களை என்ன செய்வது?

அயோத்தியில் சமணக் கோயில் இருந்த இடத்தில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பாக பாபர் இசுலாமியக் கோயிலைக் கட்டினான். இதை குண்டு வைத்து தகர்த்துவிட்டு இதுதான் இராமன் பிறந்த இடம் என்று இராமரின் தாயை இழிவு படுத்துவதும், அதையொட்டி ஆயிரக் கணக்கில் இந்நாட்டு மக்களைக் கொன்று குவிக்கும் பொறுக்கிக் கும்பலை என்ன செய்வது?

பசுவுக்காக ஒப்பாரி வைக்கும் இப்பிறதேசிக் கும்பல் ஒடுக்குண்ட தொல்குடிகளை வெட்டிச் சாய்க்கும்போது எந்தக் குடுமியைச் சிரைத்துக் கொண்டு இருந்தது?

கன்னடப் பிராமணன் சோ 29.08.2000 அன்று தினகரன் நாளேட்டுக்கு ஒரு செவ்வி கொடுக்கிறான், "சுட்டுப் பொசுக்கிவிட வேண்டுமாம்" வீரப்பனையும் உடன் இருப்பவர்களையும்! இவர்கள்தான் சட்டத்தை உருவாக்கிக் காக்கும் பிரம்ம விட்ணுக்கள்!

கர்நாடகத்தில் 1991ல் கன்னடக் களிநடிகன் முன்னின்று 1000 தமிழர்களைக் பச்சைப்படுகொலை செய்யக் காரணமாயிருந்தானே! சோ அப்போது எதைப் பிடுங்கிக் கொண்டு இருந்தான்? எத்தனைப் பெண்களின் மானம் பறிபோனது? எத்தனைக் கோடிச் சொத்துக்கள் நாசமாகின? ஓ! அதுவெல்லாம் தமிழனின் மானம், சொத்து, உயிர்!

மகாமகம் குளத்தில் பாவங்களைக் கழுவப் போன உன் இனத்து செயலலிதா அந்தக் குளத்தில் அன்றே நூற்றுக்கு மேற்பட்டோர் சாகக் காரணமாயிருந்தாளே! அன்று வாய்க்குள் என்ன கொழுக்கட்டையா இருந்தது?

இவர்களுக்கு விடுதலை இயக்கங்களைக் கண்டால் வயிறு எரிகிறது! ஆனால் ஆண்டைகளின் வன்முறை இனிக்கிறது! அரச பயங்கரவாதம் சுவையாய் இருக்கிறது!

இந்த மண்ணின் முகத்திலிருந்து வேரோடு வெட்டிச் சாய்க்க வேண்டிய ஒரு கும்பல் இருக்குமானால் அது வடுகப் பிராமணக் கும்பல்தான்! சோவின் மண்டையில் ஏறும்படிச் சொல்ல வேண்டுமானால் அவனது மொழியிலேயே சொல்ல வேண்டும்! ஆம் சுட்டுப் பொசுக்க வேண்டும்!!

வடுகப் பிராமணியத்தை வேரடி மண்ணோடு பிடுங்கி எறிய வேண்டும்! சோ சொல்லுவது போல ஈவு இரக்கமின்றி சுட்டுப் பொசுக்க வேண்டும்!!

இந்த மண்ணில் வன்முறை ஒழிய வன்முறையின் ஊற்றுக்கண்ணான வடுகத் தீவிரவாதத்தையும், வடுகப் பிராமணியத்தையும், வடுகப் பிராமணர்களையும் உடனடியாக ஒழித்துக் கட்ட வேண்டியது நாட்டை நேசிக்கும் ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடுகர்களை வாட்டி வதைத்து தன்னரசு கண்ட தனிக்காட்டுக் கள்ளர்கள்!

## சில வரலாற்றுக் குறிப்புகள்.

*விருமாண்டி*

(தமிழ்க் குமுகம் இன்று சாதிச் சழக்குகளால் உட்சிதைவுற்றுக் கிடக்கிறது! வாக்கு அறுவடை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சாதிக்கொரு கட்சி தொடங்கப்படுகிறது! மண்ணை ஆள வேண்டிய மக்கள் தங்களுக்குள் பிளவுபட்டு நிற்பது வந்தேறி வடுகர்களின் உள்ளங்களில் பாலை வார்க்கிறது! விருமாண்டி அவர்கள் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டும் சில வரலாற்றுக் குறிப்புகள் தமிழ்க் குமுகத்தின் ஓர் உட்பிரிவினர் பொல்லாத வடுகர்களின் கயமையிலிருந்து தமிழ்நிலத்தை எப்படிக் காத்துக் கொண்டனர் என்று காட்டுகிறது! விரல்விட்டு எண்ணும் அளவிற்கே தமிழகத்தில் கிடக்கும் வடுகர்கள் இன்னும் நாட்டை ஆள்கின்றனர் என்றால், சாதித் தமிழரின் கிட்டப் பார்வையே காரணியம் என்றால் மிகையாகுமா? - ஆசிரியர்)

### எடுப்பு:

தமிழர்கள் குமரிக் கண்டத்தில் 'நாடு' கண்டனர். அன்று அவர்கள் அமைத்த நாடுகளின் எண்ணிக்கை நாற்பத்தி ஒன்பது. ஏழ்தெங்க நாடு, ஏழ்பனை நாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின் பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்மதுரை நாடு என அவைகள் பிரிக்கப்பட்டன. (1)

தமிழ்நிலத்தைக் கடல் கொண்ட பின்னர், தமிழர்கள் வடக்கு நோக்கி நகர்ந்தனர். ஐந்திணை வாழ்வு, குறுநில வாழ்வு என வாழ்வை அமைத்துக் கொண்டனர். சேர, சோழ, பாண்டி பேரரசுகளை உருவாக்கிக் கொண்டனர். இப்பேரரசுகளுக்கு அடங்காத பாரி, ஆய், அதியமான், அண்டிரள் காரி, ஓரி, பேகன் போன்றோரின் நாடுகள், இவைகளின் முறிவில் அருவாநாடு, ஆப்பநாடு, கள்ளர் நாடு, வளநாடு போன்ற பல தன்னரசுகளும் தோன்றின.

இந்த வரிசையில் தோன்றியதுதான் கள்ளர்நாடுகள் பத்தும் அதற்கு அப்பால் மேலும் பதினான்கு நாடுகளும் ஆகும். கீழ்நாடு, மேல்நாடு, வெள்ளர்நாடு, சிறுகுடிநாடு, நடுவிநாடு, புறமலைநாடு, பாகனேரிநாடு, பட்டமங்கலநாடு, கண்டார மாணிக்கநாடு, குன்னங்கோட்டைநாடு ஆகிய பத்து நாடுகள் போக மேலும் 14 நாடுகள் இருந்தன.(2)

புதுக்கோட்டை தொண்டைமானால் ஆளப்பட்ட நாடு. அது வடுக அரவணைப்பில் தோன்றியது. (3) எனவே அது கள்ளர் நாடு வரிசையில் இடம் பெறாது! தஞ்சையிலிருந்த பல கள்ளர் நாடுகள் தன்னரசை இழந்துவிட்டன. தென்பகுதிக் கள்ளர் நாடுகள் மட்டுமே தன்னரசு நிலையை இழக்காது இருந்தன.

சேர, சோழ, பாண்டியர் ஆட்சி காலத்திலும், இசுலாமியப் படையெடுப்புக் காலத்திலும், வடுகக் கொள்ளையர் காலத்திலும், வெள்ளைப் பரங்கியர் காலத்திலும் இக் கள்ளர் நாடுகள் தனித்து தன்னரசாய் நிற்றன. கள்ளரில் ஒரு உட்பிரிவான புறமலைக் கள்ளரின் தன்னரசு நாட்டாரைப் பற்றி இனிக் காண்போம்

### புறமலைக் கள்ளரின் தன்னரசு நாடு:

மதுரை திருப்பரங்குன்றத்தின் மேற்கேயும், மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கேயும், நாகமலைக்குத் தெற்கேயும், குண்டாற்றிற்கு வடக்கேயும் அமைந்த நிலப்பரப்பில் புறமலைக் கள்ளர்கள் தங்களுடைய தன்னரசை நிறுவினர். (4)

இவர்களின் தலைமைக் கூடம் மையத்தில் அமைந்திருந்த திதியன் நாடாகும்! இத் திதியனோடு சேர்ந்து எட்டு கள்ளர் நாடுகளும் இருபத்திநான்கு ஊர்களும் உருவாயின.

திதியன்நாடு, வாலாந்தூர்நாடு, புத்தூர்நாடு, கருமாத்தூர்நாடு, பாப்பாபட்டிநாடு, கொக்குளம்நாடு, வேப்பனூந்துநாடு, தும்மக்குண்டுநாடு போக மேலும் 24 ஊர்கள். (5)

### பாண்டி நாட்டோடு நடந்த மோதல்:

கி.பி. 1308ல் பாண்டிநாட்டில் ஒரு பங்காளிச் சண்டை வந்தது. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் தனது பட்டத்தரசியின் மகன் சுந்தர பாண்டியனுக்குப் பட்டம் சூட்டாமல், தனது காதலியின் மகன் வீரபாண்டியனுக்குப் பட்டம் சூட்டினான். இதனால் வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் மோதல் வந்தது. தில்லி சுல்தானின் துணைத்தரவை சுந்தரபாண்டியன் பெற்றான். வீரபாண்டியனுக்குத் துணையாக உள்ளூர் மக்களும் மேற்குறிப்பிட்ட கள்ளர் நாடுகளும் நின்றன. சுந்தரபாண்டியன் வடக்கிலிருந்து மாலிக்கபூரைக் கொண்டுவந்தான். போர் நடந்தது. ஏராளமான செல்வங்களை மாலிக்கபூர் அள்ளிச் சென்றான். ஆனால் கள்ளர் நாடுகளோடு மோதித் தோற்றுப் போனான். (6) வீரபாண்டியனை கள்ளர் தன்னரசுகள் தங்களோடு சேர்த்துக் கொண்டன. மதுரைக்கு மூன்று கல் கிழக்கே உள்ள பாண்டி முனிசாமி என்று இன்றும் மக்கள் வழிபடும் இடம் இந்த வீரபாண்டிய னுடைய கல்லறைதான்!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வடுகராட்சியைக் கலக்கிய பிறமலைக் கள்ளர்கள்:

மதுரையிலிருந்த பாண்டிய அரசு பங்காளிச் சண்டையினாலேயே வீழ்ந்தது. அதன் பின்னர் இசுலாமியர் ஆட்சி பாண்டிநாட்டிற்கு வந்தது. அதுவும் சிறிது காலமே நீடித்தது. பின்னர் வஞ்சக வடுகர்கள் அதைக் கைப்பற்றினர். கி.பி.1530 வாக்கில் விசுவநாத நாயக்கன் மதுரை அரசுரிமையைக் கைப்பற்றினான். விசுவநாதன் தமிழ் மண்ணை பிடிக்க உதவியாய் இருந்தது தொண்டை மண்டலத்தைச் சார்ந்த அரியநாதன் எனும் தமிழனேயாகும். வடுகர்கள், தமிழரின் ஆட்சி முறையைப் பின்பற்றி பேரரசை 72 பாளையங்களாகப் பிரித்தனர். இதில் 32 மறவர் பாளையங்கள். 39 வடுகர் பாளையங்கள். ஒன்று கன்னடர் பாளையம்.(7)

மேற்கே புறமலை நாட்டிலிருந்து தொடர்ச்சியாக உஞ்சனை, தேவகோட்டை வரையுள்ள பகுதிகளில் வடுகர்களால் பாளையங்கள் அமைக்க முடியவில்லை. எனவே இப்பகுதியைச் சுற்றிலும் வடுகர் பாளையங்களை அவர்கள் சூழ்ச்சியோடு உருவாக்கினர்.

கண்டமநாயக்கனூர், காமயநாயக்கனூர், தொட்டப்பநாயக்கனூர், அம்மயநாயக்கனூர், நிலக்கோட்டை, பேரையூர் போன்ற வடுகப் பாளையங்கள் தமிழரான பிறமலைக் கள்ளருடைய தன்னரசுகளைச் சுற்றிலும் அமைக்கப்பட்டன. அவர்கள் அளவற்ற தொல்லைகளைக் கொடுத்தனர். இருப்பினும் இப்பகுதிகளை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

## வடுகன் ஆணிமுத்து வீரையனோடு நடந்த கடும் போர்.

கள்ளர்களின் 10 தன்னரசுகளைக் கைப்பற்ற இயலாமை வடுகரின் நெஞ்சில் முள்ளாய் தைத்துக் கொண்டிருந்தது. இறுதியில் ஆணிமுத்து வீரையன் எனும் வடுக முரண்டனை வரவழைத்து கள்ளரைக் கருவறுக்க முயன்றனர். அம்முரண்டனும் நூற்றுக் கணக்கான கள்ளர்களைக் கொன்றான். பதிலடியாக மதுரையிலுள்ள கடைகளைக் கொள்ளையிட்டனர் கள்ளர்கள். வடுகரின் கோயில் நிலங்களை அறுவடை செய்தனர். வடுக அரசின் கருவூலங்களைக் கொள்ளையிட்டனர். கொள்ளையர் கூட்டத்திற்கு முன்னால் குள்ளநரிக்கூட்டம் நிலை தடுமாறியது. வீரையனை அதே வடுக அரசன் "கொள்ளைக்காரன்" என குற்றம் சாட்டி கொன்றுவிட்டான். அவனைத்தான் வடுகர்கள் "மதுரைவீரன்" என்று பெயர் சூட்டிப் புகழ்கின்றனர்.

மதுரை வீரனின் வீழ்ச்சியில் கள்ளர் நாட்டாரின் சூழ்ச்சி இருந்ததை பின்னாளில் அறிந்த வடுக அரசன் அவனுக்கு ஒரு நினைவு விழா எடுத்தான். அதில் மதுரை வீரன் கதையைப் பாட ஏற்பாடாகி இருந்தது. கருமாத்தூர் கோட்டைத் தளநாயகன் வடுக அரசுக்குப் பாடம் கற்பிக்க எண்ணி அந்த விழாவிலேயே புகுந்து நாயக்கனை முண்டன், முண்டன் என்று கருமாத்தூர் கட்டியங்காரனை வைத்துப் பாட வைத்தார். அவரும் பாடி தான் கையில் வைத்திருந்த மாலையை கருமாத்தூர் படைத் தலைவருக்குப் போட அதிர்ச்சியில் வெகுண்ட வடுகன் அவரைக் கைது செய்தான். கைது செய்யப்பட்ட அவரை மீட்க படை அணியமாகிய போது, கருமாத்தூர் கோட்டைத் தளநாயகர்களின் மனைவியர் மாயக்காளும், இராக்கம்மாளும் குதிரையேறிப் போய் போர் புரிந்து அவரை மீட்டு வந்தனர். வடுகன் வாய்பிளந்து ஒடுங்கினான். (8)

## வடுகனுக்குப் பணியாத "பணியான்" இளைஞர்கள்:

பணியான் எனும் ஊர் கொக்குளம் நாட்டின் ஓர் சிற்றூர். வீரபாண்டியனின் பிறங்கடைகள் வாழ்ந்த ஊர். திருமலைநாயக்கன் இம்மக்களை எப்படியாவது அடக்கி ஒடுக்க வேண்டும் என்று எத்தனையோ பல முயற்சிகளை மேற்கொண்டான். பணியான் நாட்டு வேங்கைகள் கரந்தடிப் போரில் வல்லவர்கள். எனவே வடுகன்களை ஓட ஓட விரட்டினர். ஆனால் கோழைகள் பணியான் ஊரிலுள்ள இரு இளைஞர்களைப் பிடித்துக் கொண்டுபோய்அவர்களின் கைகளிலும் கால்களிலும் சங்கிலிகளை மாட்டி வடுகனை வணங்கச் சொன்னார்கள். இளைஞர்கள் மறுத்தனர்.

உசாவல் மறுநாளுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. மறுநாள் உசாவல் இடத்திற்கு அழைத்து வரும் வாயிலை உயரம் குறைந்ததாக அமைத்திருந்தனர். அப்படியாவது வடுகனின் முன்பாக அவர்கள் குனிவார்கள் என்று எச்சில் கனவு கண்டனர். அப்போதும் கூட நிலைப்படிகளில் உறுதியாக தொங்கிக் கொண்டு அவ்விளைஞர்கள் முதலில் கால்களை உசாவல்கூடம் நோக்கி நீட்டிப் பின்னர் உள்ளே வந்தனர். இதுவும் வடுகனின் மூஞ்சியில் கரியைத் தடவுவதாய் இருந்தது.

"கைகளை வெளியே நீட்டிய நிலையில் அவர்களைச் சுண்ணாம்புக் காளவாசலில் வைத்து எரியுங்கள்" என்று வடுகன் ஆணையிட்டான் சாகும் தருவாயிலாவது அவர்கள் கைகூப்புவார்களா என்பது அவ்வடுகப் பொறுக்கியின் நப்பாசை. ஆனால் அந்த வீரத் தமிழ் மறவர்கள் உயிர் போகும் நிலையிலும் பணிய மறுத்து இறந்து போயினர். (9)

## திருமலைநாயக்கனின் மூக்கறுத்தனர்!

மதுரையில் மிகப்பெரிய அரண்மனை ஒன்றை கட்டி முடித்த திருமலை நாயக்கன் இறுமாப்பு கொண்டான். தன்னை இனி யாரும் அண்ட முடியாது என்று எக்காளமிட்டான்.

அவனுக்குப் பாடம் கற்பிக்க கள்ளர் நாட்டார் முடிவெடுத்தனர். ஒரு நாள் இரண்டாம் சாமத்தில் இரு கள்ளர் இளைஞர்கள் அடிமேல் அடியெடுத்து வைத்து அரண்மனையை நெருங்கினர். உடும்பின்

www.tamilarangam.net

வயிற்றில் கயிற்றைக் கட்டி அரண்மனையின் மேல்மாடிக்கு கயிற்றை வீசினர். அதன் வழியாக மேலே ஏறினர். வடுகனும் அவன் துணைவியும் படுத்துக் கிடந்த இடத்திற்கு மேலேயே வந்து அம்மாடியில் கன்னம் வைத்தனர். ஒரு ஆள் இறங்கும் அளவிற்கு துளையிட்டு உள்ளே இறங்கி அங்கிருந்த நகைகளையும், வடுகனின் எச்சில் கிண்ணத்தையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டனர். இவையெல்லாம் ஒரு மணி நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது.

பொழுது புலர்ந்தபோது என்றைக்கும் இல்லாமல் மேல் தளத்திலிருந்து ஒளி உட்புகுவதையும், பொருட்கள் காணாமல் போயிருப்பதையும் கண்டு திடுக்குற்றான். இப்படியும் நடக்குமா என்று புலம்பித் தீர்த்தான். சொந்த உடமைகளைக் காக்க இயலாத வடுகன் மக்களை எப்படிக் காப்பான் என்று மக்கள் எள்ளி நகையாடுவரே என்று எண்ணி மனம் புழுங்கினான்.

பின்னொரு நாளில் எடுத்துச் சென்ற பொருட்களை கள்ளர்கள் வந்து திருப்பிக் கொடுத்தனர். திருமலை நாயக்கனின் அந்த அரண்மனையில் இன்றைக்கும் அந்த துளை இருப்பதை செல்வோர் சென்று காணலாம்.(10)

## மூக்கறுப்புப் போர்.

கள்ளர்கள் தனியரசாக இருந்து செயல்பட்ட போதும் பிற தமிழர்க்கு இன்னல் விளைந்த போது வீரமிக்க போர்களை அவர்கள் புரிந்துள்ளனர். மைசூர் அரசன் தமிழகத்தின் மீது போர் தொடுத்தபோது போரில் சிக்குண்ட தமிழர் பலரின் மூக்கையறுத்து கொடுமை செய்தனர். 1659ல் மைசூரை எதிர்த்து போரிட்ட போது வடுகப் படையில் முன்னின்று போரிட்டது கள்ளர்கள்தான். அப்போது பதிலடியாக அப்பாவி மக்களின் மூக்கையறுக்காமல், மைசூர் படைத் தலைவனின் மூக்கை அறுத்து அவனைத் தளைப்படுத்தி மதுரைக்கு இழுத்து வந்தனர். "மூக்குப்பறி" எனும் பட்டம் அப்படைத் தலைவனுக்கு அப்போது சூட்டப்பட்டது (11)

## வரிகொடா இயக்கம்:

மருதநாயகம் என அழைக்கப்பட்ட யூசுப்கான் மதுரையை ஆண்டபோது விடுதலைப் போராளிகளுக்கு கடும் தொல்லை கொடுத்தான். 1755ல் பிறமலைக் கள்ளரின் தன்னரசு நாடுகள் 10ம் சேர்ந்து வரிகொடா இயக்கம் நடத்தினர். இது கண்ட நெற்கட்டுச் சேவல் பூலித்தேவன் பூரித்துப் போனான். பின்னாளில் யூசுப்கான் கள்ளர்களைத் தனிநாடாக இயங்கவே விட்டுவிட்டான். தனது படைகளிலும் அவர்களில் பலரைச் சேர்த்துக் கொண்டான்.

1800ல் மருது பாண்டியருக்கு உதவினர்.
ஆஷ் எனும் பரங்கியனைச் சுட்டுக் கொன்றவருக்குப் புகலிடம் அளித்தனர்.
ஆங்கிலேயர் அரசை இறுதிவரை எதிர்த்தனர்.
ஆங்கிலேயர் கொணர்ந்த கருப்புச் சட்டங்களுக்கு இவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.
இவர்களுடைய எதிர்ப்பினாலேயே ரேகைச் சட்டத்தை ஆங்கில அரசு 10. 05. 1947ல் திரும்பப் பெற்றது (12)
1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கூடலூர் காவல் நிலையத்தைத் தாக்கி காவலர்களை எரித்ததும் இவர்கள்தான்.

## இறுதியாக...

தமிழர் தம் மண்ணுரிமையை மீட்க வேண்டிய காலத்தில் நாம் உள்ளோம். இப்போதைய தமிழகத்தைச் சுற்றியும், தமிழகத்தினுள்ளும் நிலங்கள் வடுகரிடமும் மாற்றினத்தாரிடமும் சிக்கிக் கிடக்கிறது. தமிழகத்தின் அரசுரிமையை நாம் மீட்க வேண்டும். பொருளியல் மற்றும் குமுக உரிமைகளை மீட்க வேண்டும். இம்மாபெரும் கடமைகள் தமிழருக்கு முன்னால் இருக்க வீரம் செறிந்த போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது தமிழரின் கடமையல்லவா?

## அடிக்குறிப்புகள்


1. தேவநேயப் பாவாணர், தமிழர் வரலாறு, கழக வெளியீடு பக்.4
2. முத்துத் தேவர், மூவேந்தர் குலதேவர் சமூக வரலாறு, கழக வெளியீடு, பக்12
3. புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு.
4-8 முத்துத் தேவர், மூவேந்தர் குலதேவர் சமூக வரலாறு, கழக வெளியீடு, பக்114, 93, 90, 121.
9. பண்ணியான் ஊர்த் தலவரலாறு, செவ்வி: விருமாண்டி
10-12 முத்துத் தேவர், மூவேந்தர் குலதேவர் சமூக வரலாறு, கழக வெளியீடு, பக்128, 140, 144



இணையத்தளத்தில் இப்போது
ஆய்வரண் - வேர்கள் - தமிழர்களம்
http://www.geocities.com/aayvarann
http://www.geocities.com/tamilvaergall
http://www.geocities.com/thamizharkalam
இருள் கிழியும்! விடுதலை விடியும்!!

www.tamilarangam.net

# சிங்கள இனவெறி அரசுக்கு ஆயுதம் விற்கும் இந்திய வல்லாதிக்க அரசு!

கடந்த 20 ஆண்டுகளில் இலங்கையில் சிங்கள இனவெறி அரசு 60,000க்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது யாவரும் அறிந்ததே! இதுபோக இன்னும் இலக்கக் கணக்கானோரை ஏதிலிகளாக ஆக்கியுள்ளதும் அறிந்ததே!

தென்கிழக்கு ஆசியாவில் வல்லாதிக்க வெறி கொண்ட இந்திய அரசு இலங்கையில் குழம்பிய குட்டையில் கருவாட்டை அள்ளு எத்துவாளித்தனத்தையே கடைபிடித்து வருகிறது.

மாந்த நேயம் குறித்து வாய்கிழிய உலகிற்கு அறிவுரை வழங்கும் இந்தியா திலீபனும், பூபதி அம்மாளும் உண்ணா நோன்பு இருந்து மரிக்கக் காரணமாக இருந்தது.

இலங்கையில் தமிழர்கள் உணவுக்கும் உடைக்கும் மருந்துக்கும் குருதிக்கும் போராடிச் செத்து மடிந்தபோதெல்லாம் ஈவு இரக்கம் காட்டவில்லை. தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஈழத்திலுள்ள தன் உடன்பிறப்புகளுக்கு உயிர் காக்கும் மருந்தும், உடுத்த உடையும் கொடுக்க முன்வந்தபோது அதை தனது இரும்புக் கரம் கொண்டு தடுத்தது.

ஆனால், கொழும்பில் ஒரு எண்ணைக் கிணறு தீப்பிடித்தபோ இங்கிருந்து வானூர்தி வழியாக அணைப்பான்களைக் கொண்டு சென்று தீயை அணைத்தது. மக்கள் சாகக்கிடந்த போது அசையாத இந்தி 'மாந்த' உணர்வு, இனவெறிக் காடையர்கள் யாழ்ப்பாணத்தில் சிக்கிக் கொண்டபோது துடியாய்த் துடித்தது!

200 கோடி உருபா கொடுத்தது. இந்தி நாட்டுக்குள் வறுமையும் சீரழிவும் தாண்டவமாடியபோது இந்தத் தாராளக் கொடையை தாரை வார்த்தது.

கார்கிலில் செத்தால் இந்திய உயிர், நடுக்கடலில் தமிழன் சிங்களன் கையில் சுடப்பட்டு மடிந்தால் தலை மயிர் என்று கருதுவதுதான் இந்திய வல்லாதிக்கப் பாசம்!

கடந்த பல ஆண்டுகளாய் நாம் காணும் காந்தி தேசத்தின் கபட நாடகம் இதுதான்! இதை மேலும் மெய்ப்பிக்க இப்போது இலங்கைக்கு ஆயுதம் விற்க முன்வருகிறது இந்தியா!

கடல் கண்காணிப்புக் கலன்களை விற்க இந்தியா முடிவு செய்து விட்டது. இரவு வேளைகளில் கண்காணிக்கும் ஏந்துடனும், நெடுந் தொலைவு சுடக்கூடிய சுடுகருவிகளுடனும், படைத் தளவாடங்களை இறக்குமதி செய்யும் ஏந்துடனும் வடிவமைக்கப்பட்ட இந்த கலன்களை இந்தியா இலங்கைக்குக் கொடுக்க முன்வந்துவிட்டது!

20 ஆண்டுகளுக்கு முன்பாக தென் கொரியாவிலிருந்து இந்தியா தருவித்துக் கொண்டிருந்த இம்மாதிரியான கடல் கண்காணிப்புக் கலன்களை இப்போது இந்தியாவே உருவாக்கி வருகிறது.

இலங்கைக்கு இப்பொழுது விற்கும் இச்செய்தி பரவினால் தமிழகத்தில் கொந்தளிப்பு வரலாம் என்றெண்ணி இந்த "கள்ள வணிகம்" கமுக்கமாகவே நடைபெறுகிறது. பாதுகாப்புத் துறை அமைச்சர் இது குறித்து கள்ள மௌனம் சாதித்தாலும். பாதுகாப்பு அமைச்சக தரவுகளை மேற்கோள்காட்டி newindpress.com எனும் இணைய தளம் செய்தியைப் போட்டு உடைத்துவிட்டது!

**வெந்நிக்கனல்**

# காவிக் கும்பலின் போலிப்பற்று!

இந்தியா என் தாய்நாடு! இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர் என்று சரடு பல விட்டாலும் காவிக் கும்பல் வடுகப் பிராமணியத்தை தூக்கி நிறுத்துவதில் இந்திய எருமைப்பாட்டை தூக்கிப் போட்டு மிதிக்கிறது! நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ்.ன் தலைமையகம் உள்ளது. கடைந்தெடுத்த தேசப்பற்றாளர் களாக தங்களை அறிவித்துக் கொள்ளும் இவர்களுடைய தலைமையகத்தில் ஆகற்று 15 அன்று மூவண்ணக் கொடியை ஏற்ற மறுத்துவிட்டனர். காவிக் கொடியைத்தான் ஏற்றுவோம் என்று உறுதியாக இருந்துவிட்டனர்.

காந்தியை தேசத்தின் தந்தை என்றார்கள்! அவரைச் சுட்டுக் கொன்றார்கள். காவிக் கும்பலின் தேசப்பற்றின் விளைவு அது!

வெள்ளையனே வெளியேறு இயக்க வரலாற்றில் ஒரு காவல் நிலையம் தாக்கப்பட்டது! இப்போதய "மூட்டுவலி புகழ்" வாச்பேய் கைதானவர்களுள் ஒருவர். நடுவர் முன்பாக வந்து காவல் நிலையத்தைத் தாக்கியவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு இனிமேல் இப்படி எதிலும் ஈடுபடமாட்டேன் என்று மன்றாடி கைகூப்பிப் பணிந்து வெளியே வந்துவிட்டார்.

இந்திராகாந்தி கொண்டுவந்த அவசரகால நிலையில் செயப்பிரகாசு நாராயணன் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். மராட்டிய மாநிலம் புனேயில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நிறைய பேர் சிறை வைக்கப்பட்டனர். ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் இந்திராக்காந்திக்கு கமுக்கமாய் கடிதம் எழுதி மன்னிப்பு கேட்டுவிட்டு, இந்திராவின் 20 அம்சத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு தருவதாக எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே ஓடிவந்துவிட்டனர்.

இந்தியா வெள்ளையனின் பிடியிலிருந்து 1947ல் வெளிவந்தபோது நாடு முழுவதும் மூவண்ணக் கொடிதான் உயர்த்தப்பட்டது. ஆனால் இவர்களோ காவிக் கொடியை மட்டுமே ஏற்றினர்.

அயோத்தியில் பாபர் கோயில் இடிக்கப்பட்டது தொடர்பான முகாமையான ஆவணங்களோடு இருந்த சுபாசு எனும் அதிகாரி தில்லியில் ஓடும் தொடர் வண்டியிலிருந்து தள்ளி விடப்பட்டு அண்மையில் கொல்லப்பட்டுள்ளார்.

80களில் சட்டிசுகார் இயக்கம் கண்ட சங்கர் குகா நியோகியைக் கொன்றதும் இதே காவிக் கும்பல்தான்.

பசுமாட்டு அரத்தம் சிந்தக்கூடாது என்று நீலிக்கண்ணீர் வடிக்கும் காவிக் கும்பலின் மாந்த அரத்த வெறிக்கு அளவே கிடையாது!

**மறவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழின் தனிப்பெரும் சிறப்புகள் (10)

**இரா. இளங்குமரன்**

அகராதி என்றதும் நம்நினைவில் முதற்கண் வருபவர் எவர்? சதுரகராதி செய்தவரும் வேறு பல அகராதிகள் தந்தவரும் ஆகிய வீரமாமுனிவர்தாமே முன்னே நிற்கிறார்! அவருக்கு முன்னர்த் தமிழில் அகராதி உரைநடையில் தோன்றவில்லை என்பது மெய்யே.

ஔவையார் பாடிய அறஞ் செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல் எனத் தொடரும் ஆத்திச்சூடியும்,

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று, இல்லறம் அல்லது நல்லறம் அன்று எனத் தொடரும் கொன்றை வேந்தனும், அகராதி வரிசை பெற்றமை அறியலாம்.

ஔவையார் வீரமாமுனிவர் காலத்திற்கு முற்பட்டவர் என்பது வெளிப்படை.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகியவற்றில் வரும், 'வருக்க மோனை என்பது அகராதி முறையில் அமைந்ததாகும். பகலே எனத் தொடங்கும்பாட்டு, பாசிலை, பின்னும் எனத் தொடர்ந்து இப்பொழுது என நிறைவது அறியத்தக்கது.

இவற்றை இயற்றிய ஆசிரியர் அமிதசாகரர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் பாடிய ஔவையார்க்கு முற்பட்டவராவர்.

இனி, இரேவண சித்தர் என்பார் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர் அகராதிக்கு முற்பட்ட நிகண்டுநூல் செய்தவர். அவர் செய்த நிகண்டின் பெயர் 'அகராதி நிகண்டு' என்பது.

இதனை நோக்க அகராதி என்னும் பெயரைத் தமிழுலகுக்கு முற்பட வழங்கியவர் இச்சித்தரே எனலாம். ஆனால், இக்கலைச்சொல் ஆக்கிக் கொள்ள மூலமாக இருந்திருக்கும் ஒன்று நாம் நினைக்க முந்து நிற்கின்றது. திருக்குறளின் முதல் பாட்டில் அகரமும் ஆதியும் வருதல் 'அகராதி'யைக் காண வாய்த்திருக்கலாம். அகரமும் ஆதியும் தொடர்பின்றி இடையிட வருகின்றதே எனின், ஒரு கலைச்சொல் ஆக்கம் பெறும்போது சுருங்கியதாகவும், பொருளை எளிதில் அறிய உதவுவதாகவும் வழங்குதற்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும் என்பவை அடிப்படையாம்.

நாட்காட்டி, நாட்குறிப்பு; நாட்பயிற்சி என்பவை இயல்பாக வழங்கப்படுவன. முன்னிரண்டும் பெருவழக்கில் ஊன்றிவிட்டவை. அண்மைக்கால வரவாகிய காலண்டர், டைரி என்பவற்றுக்கு நாட்காட்டி, நாட்குறிப்பு என்னும் கலைச்சொல்லாக்கம் கிட்டிய வகை என்ன?

"நாள் என ஒன்று போல் காட்டி" எனவரும் குறள் தொடரே நாட்காட்டி மூலமாம். நாட்காட்டி உருவாக்கம் பெற்றபின் அதன் தூண்டலால் நாட்குறிப்பும் உண்டாயிற்றாம். ஆதலால் ஒரு தொடரில் பல சொற்கள் இருப்பினும் அவற்றில் விடுவன விட்டு இணைப்பன இணைத்துக் கலைச் சொல் ஆக்குவது மரபாகும். இவ்வகையில் அமைந்ததே 'அகராதி' என்பதாம்.

இவ்வாறே 'எழுதுங்கால் கோல் காணாக் கண்' என்பதன் வழியாக எழுதுகோலும்

'நீட்டி அளக்கும் கோல்' என்பதன் வழியாக நீட்டல் கோல், நீட்டல் அளவை என்பனவும் அமைந்தமை அறியலாம்.

இவ்வாறு இடையிட்டுக் கண்டே கலைச்சொல் கொள்ள வேண்டும் என்பது இல்லை. தக்கோர் அமைக்கும் பாடல், உரைநடை, பேச்சு வழக்கு ஆயவற்றிலே அரிய கலைச் சொற்கள் கிடைப்பது உண்டு.

"சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல்" என்னும் வள்ளுவத் தொடர் வழியே இடையிட்டு எடுத்துச் 'சமன் கோல்', என ஒரு கலைச் சொல் கொள்ள வாய்க்கின்றது. அதனுடன் 'சீர்' என்பதன் வழியாகச் 'சீரை' என்னும் சொல் 'தராசு' என்னும் பொருள் தருவதாக அமைந்து விடுகின்றது. 'சீரை புக்க தூயோன் போல' எனச் சிபி சொல்லப்படுதல் இப்பொருள் விளக்கும்.

'தக்கார் இனத்தனாய்' என்னும் குறளின் முதற்சொல், திருக்கோயில் அறக்காவலராம் 'தக்கார்'க்கு வழங்கப்படுகின்றது. அச்சொல்லே கலைச் சொல் ஆகிவிடுகின்றது அல்லவா!

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்பதில் வரும் முற்பகலும் பிற்பகலும் கலைச் சொல்லாகச் சிலம்பிலும் மேகலையிலும் இடம் பெற்றதுடன் ஏ.எம், பி.எம் எனவரும் ஆங்கிலச் சொல்லுக்கு மொழியாக்க மாகவும் ஆகிவிடுகின்றன அல்லவா!

'மனைமாட்சி' எனத் தொலைக்காட்சி காட்டுவதன் பெயர் விளக்கம் 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்னும் குறளாட்சிதானே!

நீரில் வாழும் உயிர்களை 'நீர்வாழ்வன' என ஆறெழுத்தில் கூறினர். அதனை 'நீர்வாழி' எனச் சுருக்கவும் செய்தனர். சிவ வாக்கியர் 'நீரி' என ஈரெழுத்தாகச் சுருக்கிவிட்டார். பொருள் விளக்க மும் குறையாமல் சொற் சுருக்கமும் அருமையாய் அமைந்து அரிய கலைச் சொல்லாகிவிட்டது..

உயிர் உடையவை 'உயிரி'; ஊர்ந்து செல்வவை ஊரி என வழங்க நீரி தூண்டியது. பயிர் வகைகளைப் 'பயிரி' என்றும், தொடர் வண்டியைத் 'தொடரி'

www.tamilarangam.net

என்றும் வழங்கலாம் என அவை தூண்டுகின்றன அல்லவா!

'கல்லூரி' என்னும் சிந்தாமணிச் சொல்லும், அகடூரி என்னும் பாம்புப் பெயரும் நமக்கு முகம் காட்டுகின்றன அல்லவா!

தமிழின் பிரிவுகளுள் முதற்பிரிவு 'இயல்'தானே! இது எத்தனை கலைச் சொற்களை ஆக்கியுள்ளது. இயலுதல் = நடத்தல், ஆடுதல், முடிதல் எனப் பொருள் தருமே! இயல்பு என்பது இயற்கை, தன்மை எனப் பொருள் தருமே.

இயற்றுதல், இயற்கை என்பவற்றின் முதல் 'இயல்'தானே.

பொறி இயல், அறிவு இயல், பொருள் இயல், மருத்துவ இயல் முதலாம் இயல்கள், இரு சொற்களை - இருந்த சொற்களை - இணைத்துக் கொண்டவை தாமே.

'துறை' என்பது நீர்த்துறை, படித்துறை, படகுத்துறை யாக இருந்து, இலக்கண இலக்கியங்களில் 'துறை' ஆட்சி பெற்ற அளவில் நின்றதா?

கல்வித்துறை, நலத்துறை, தமிழ்வளர்ச்சித் துறை, பொதுப்பணித் துறை எனப் பல்வேறு துறைகளுக்குப் புத்தாட்சிச் சொல்லாகிவிட வில்லையா?

விடிந்ததும் 'செய்தித் தாளை' நோக்குகிறோமே! 'செய்தித்தாள்' என்பது ஒரு கலைச் சொல் இல்லையா?
செய்தியையும் தாளையும் இணைத்துக் கொண்டவைதாமே அவை.
செய்தி என்றால் செய்த நன்மையைக் குறித்த அப்பழஞ்சொல் ஒரு தகவல், தாக்கல் எனப் பொருள் கொண்டு, தாளில் எழுத்தாகி வந்தமையால் பெற்ற பெயர்தானே அது.

வானும் இருந்தது; ஒலியும் இருந்தது; வானொலி கிடைத்தது.
தொலையும் இருந்தது; காட்சியும் இருந்தது; தொலைக்காட்சியாயது.
தொலையொடு காட்சி இணையத் தொலைக் காட்சி ஆயது என்றால், தொலையொடு பேசி இணையத் தொலைப்பேசி தானே ஆக வேண்டும். தொலை பேசி என்றால் தொலைந்து போன, தொலைந்து போகிற, தொலைந்து போகும் பேசி என வினைத் தொகையாக அல்லவோ ஆகிவிடும்.
தொலைவுக்குப் பேசுதல், தொலைவில் இருந்து பேசுதல் ஆகாதே! முதற்கண் இதனை எழுதிப் பரப்பியவன் பிழைபடப் பரப்பி விட்டான்; பெருக வழங்கிவிட்டது; எழுத்திலும் பிழையாக நின்றுவிட்டது. எழுத்தில் இருப்பது இத்தனை அத்தனையா?

'பொது தொலை பேசி' என்பது சந்து பொந்துகளில் எல்லாம் சிற்றூர் பேரூர் மூலை முடுக்கு எல்லாம் இடம் பெற்று விட்டதே. இம் முச் சொல் இணைப்பில் இரு சந்திப் பிழைகள் உள்ளனவே!

பொதுவானது என்னும் பொருள் தர வேண்டும் என்றால் 'பொதுத் தொலைப் பேசி' என்றல்லவா இருக்க வேண்டும்.

'பொது' தொலைப் பேசி என்றால் பொதுக்கப்பட்ட, பொதுக்கப் படுகின்ற, பொதுக்கப்படும் தொலைப் பேசி என்றல்லவா ஆகும். பொதுத்தல் - துளையிடுதல். பொத்து வடிதல் வழக்கில் உண்டே.

பல்கால் பழகிவிட்டால், அதிலும் பெரியவர்கள் வழங்கிவிட்டால் அதுவே 'சரி' என்னும் எண்ணத்தையும் ஊட்டிவிடுமே! ஆதலால் சீரான கலைச் சொல்லை உருவாக்குதலோடு சீரான வடிவிலும் தந்து பரப்புதல் வேண்டும் என்பது தெளிவாம்.

நம்மவர் கண்ட அறிவியல் நுணுக்கங்களைத் தாம் படைத்த சொல்லிலேயே வைத்தனர்.

'வையகம்' 'உலகம்' 'ஞாலம்' 'பூ' என்றெல்லாம், நிலத்திற்குப் பெயர் வைத்தனர். அண்டம், பேரண்டம், வியன்ஞாலம் என்றெல்லாம் பெயர் வைத்தனர். நாள் கோள் மீன் எனப் பெயர் சூட்டினர். இவையெல்லாம் அறிவியல் விளக்கச் சொற்கள் என்பதை ஆய்வாளர் எண்ணத் தவறி விட்டனர். புலவர்கள் இலக்கிய நயம் கண்ட அளவில் நிறுத்திக் கொண்டனர்.

'வை' என்பது நெல்லின் பெயர். அரிசி எவ்வாறு மூடு பெட்டியில் பொதிந்து வைத்தது போல் உள்ளது என நாம் கண்டு கொள்ளலாம். அவ்வாறு பொதிந்து வைத்த மணி, தவச வகையில் இல்லையே!

'வை' யின் தாள், வைக்கோல், வைத்தூறு எனப்படும் வைக்கோல் போர், ஊர் ஊர்க்குக் காணலாமே.

'வையம்' வைக்கப்பட்ட இடம்; வை அகம் - வையகம், வையம்; உழி என்பது இடம். வைத்துள்ள இடம் வைப்பு உழி, வைப்புழி என்ன வைத்திருக்கிறது எனின், என்ன வைத்திருக்க வில்லை என எதிர்வினா வினாவலாம்!

புல்வகை, கீரைவகை, காய்கனிவகை, மருந்துவகை, கிழங்குவகை, தவசவகை, மரவகை இவை மட்டுமா?

தோண்டினால் நீர், கல், இரும்பு, நிலக்கரி, வயிரம் இவை மட்டுமா? கல் நெய், மண்நெய், தங்கம், மணி, பவழம் என எண்ணி முடியுமா? இவற்றையெல்லாம் புதையலாக வைத்திருக்கும் இடம் வையம், வையகம், வைப்புழி எனத் தக்கது இல்லையா?

வையம் என்பது வண்டி; இயக்கம் உடையது; உலகம் இயக்கம் உடையது அல்லவா!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உல், உலம், உலண்டு என்பவை உருண்டை வடிவின. அம்மட்டோ, உலம், உலா, உலாவுதல் உருண்டு சுழல்வன அல்லவோ!

உலகம் உருண்டை என்றும் சுழல்வது என்றும் அறிவிக்கும் அறிவியல் சொல் அல்லவா!

அண்டம் என்பது என்ன? முட்டை, விதை இவற்றின் வடிவம் என்ன? உருண்டைதானே!

உலகம் 'ஆரஞ்சுப்பழம்' போன்றது என அறிவியல் அறிஞன் வடிவு காட்டினால், தமிழன் முட்டை வடிவு என்றானே! அறிவியல் பார்வையில் வந்தது அப் பெயர்'டும், கலைச் சொல்லும் என உணர வேண்டும் அல்லவா!

ஞாலம் என்பது என்ன? உலகம் என்பதுதானே. அப் பெயர் என்ன சொல்கின்றது? ஞாலுதல் - தொங்குதல் - உலகம் தொங்கிக் கொண்டு உள்ளது என்பதைக் காட்டுவதுடன், ஞாலுதல் - தொங்குதல் - உலகம் தொங்கிக் கொண்டு உள்ளது என்பதைக் காட்டுவதுடன், ஞாலுதல், சுழலுதல் என்பதையும் காட்டுகிறது.

'ஞான்று' என்பது என்ன? இடம்; காலம். ஆண்டு, யாண்டு என்பவை என்ன? இடம், காலம். முன், பின் என்பவை என்ன? இடம், காலம். இன்ன ஒவ்வொரு சொல்லும் இடப் பொருளும் காலப் பொருளும் ஒருங்கே தருவது ஏன்?

முதற்பொருள் என்பது இடமும் காலமும். அவை ஒன்றை விட்டு ஒன்று பிரியாதவை என்னும் அறிவியல் பார்வை விள்க்கச் சொற்கள் அவை என நம் அறிவாளர்கள் உணர்ந்தனரா? உரைத்தனரா? பரப்பினரா? இல்லையே ஏன்?

அவர்கள்தாம் 'தமிழ் அறிவியல் கல்விக்கு ஆகாது' என்று கண்ணை மூடிக் கொண்டு கத்திக் கதறுபவர் ஆயினரே! அவர்கள் கருத்து தமிழ்ச் சொற்களில் அறிவியல் உண்டு என்று எண்ணத் தலைப்படுமா? சொல்லத் தலைப்படுமா? எழுதத் தலைப்படுமா?

பூ என்பது என்ன? அரும்பு முகை மொக்கு மலர் அலர் என விரிவுடையது பூ. உலகம் வெளி, வளி, ஒளி, நீர், நிலம் என விரிதலையுடைமையால் பூ எனப்பட்டது என்க.

நாள் என்பது கதிரோன்; நாளை ஆக்குவது அதன் ஒளிப் பக்கமும் இருட் பக்கமும் சுழல் முறையால் பகுக்கப்பட்டது; பகல் இரவு; பகல் ஒளி; பால் ஒளி; இரவு - இருள் உடையது.

நாளின் ஒளியை வாங்கிக் கொண்டு ஒளி செய்வது 'கோள்' எனப்பட்டது. ஞாயிறு கதிரோன், திங்கள் செவ்வாய் முதலியவை ஞாயிற்றின் ஒளி கொண்டு ஒளி செய்வன ஆதலால் அவை 'கோள்' எனப்பட்டன. கோள் சொல்லுதலை அறியாதவர்களா நாம்; நாமே சொல்லாவிடினும் சொல்வாரை அறிந்துதானே உள்ளோம்.

'தோட்டம் துரவு' என்பது ஓர் இணைச் சொல். தோட்டமும் கிணறும் என்பது பொருள். துரவு கிணறு எப்படி ஆயது? துரவு என்பது துரத்தல், துரப்பு, துருவல், துளைத்தல், தோண்டல் என்பனவும் துரப்பணக் கருவி ஆயவற்றையும் கொண்டு வந்து முன்னே நிறுத்துகின்றது.

தமிழ்நாட்டுக் கோயில் கோபுரம் கோட்டை சிற்பம் குடைவரை என்பவற்றை நோக்கும் ஒருவனுக்கு அவற்றுக்கு கலைச் சொல் இல்லை என்று சொல்ல வாய் வருமா? வாய்வந்தால் அவன் உள்ளத் தடிப்பைக் காட்டுமேயன்றி உள்ளத் துடிப்பைக் காட்டாதே! தமிழில் எக்கலைக்கும் கலைச் சொல் காணக் கைவந்த சொல் உண்டு! ஆனால் மெய்வந்த பார்வை வேண்டுமே!

தொடர்வோம்.


# பு த் த க ங் க ள்

குணா அவர்கள் எழுதிய
திராவிடத்தால் வீழ்ந்தோம்
10ரூ.
தமிழின மீட்சி
15ரூ.
வள்ளுவத்தின் வீழ்ச்சி
120ரூ.
விழுதுகள்
30ரூ.
கிறித்துவத்தின் உள்ளீடு தேசிய விடுதலையே
5ரூ
புதிய சமய உருவாக்கங்கள்
5ரூ.
மண்ணுரிமை (முதற் பகுதி)
150'ரூ

பாவிசைக்கோ எழுதிய
பாவிசைக்கோ பாடல்கள்
25ரூ.

பூ.அர.குப்புசாமி அவர்கள் எழுதிய
காவிரியும் கலைஞரும்
10ரூ.
காவரி அங்கும் இங்கும்
50ரூ.

**வேர்கள் முகவரிக்கு இன்றே எழுதுங்கள்.**

www.tamilarangam.net

# செய்தித் தெளிவுகள்:

### நானும், கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவும் சொன்ன சொல்லில் மாறுவதில்லை! இது வீரப்பனுக்குத் தெரியும் - சொன்னவர் கருணாநிதி.

ஆட்சியில் ஏறியபோது மிகக் கடுமையாக பேருந்துக் கட்டணங்களை உயர்த்தினார். 2001வரை பேருந்துக் கட்டண உயர்வு இல்லை என்றார். ஆனால் இப்படிச் சொன்ன சில மாதங்களுக்குள் மீண்டும் கடுமையான கட்டண உயர்வை பொதுமக்கள் தலையில் திணித்தார்.

தான் இம்முறை பதவியேற்ற போது "எள் முனையளவு ஊழல் நடந்தாலும் பதவியைத் தூக்கி எறிவேன்" என்றார்! தி.மு.க.வின் ஊழல் சாக்கடை அ.தி.மு.க.வின் வாடையை மிஞ்சுகிறது. "மதச் சிறுபான்மையினருக்கு ஊறு நிகழ்ந்தால் பதவியைத் துச்சமெனக் கருதித் தூக்கியெறிவேன்" என்றார். ஆனால் தன் பதவியை மஞ்சள் துண்டு போட்டு.காத்துக் கொள்கிறார். காவிரியில் தண்ணீர் விடவில்லை என்று கர்நாடகத்துக்காரன் சொன்ன போதும்கூட "தண்ணீர் வந்துவிட்டது" என்று தமிழர்களிடம் பொய் சொன்னார்.

காவிரி, தமிழ் மொழிவழிக் கல்வி, விலைவாசி உயர்வு, கிருட்டிணா நதிநீர், என்று அத்தனை காரியத்திலும் பொய், பித்தலாட்டம் தவிர வேறு என்ன நடந்திருக்கிறது?

இப்போது தன்னைச் சொன்ன சொல் மாறாதவன் என்று வீரப்பனை நம்பச் சொல்லுகிறார்.

### வாச்பாயின் மூட்டுவலி

மூட்டுவலி, முதுகுவலி, வயிற்றுவலி என்று செயலலிதா, கர்நாடக முதல்வர்கள் போன்றவர்கள்தான் பம்மாத்து செய்துகொண்டு இருந்தனர். இப்போது வாச்பாய்க்கு மூட்டுவலியாம்!

அதுவும் அமெரிக்கா போக வேண்டிய நேரத்தில் மூட்டுவலி வந்திருக்கிறது.

அமெரிக்காவிலிருக்கும் போது பாக்கிசுத்தானின் அதிபரான பர்வேசு முசரபும் அமெரிக்கா வருகிறார். அமெரிக்காவில் வைத்து இருவரும் பேசவேண்டிய கட்டாயம் வருகிறது. அதில் அமெரிக்கா தலையிடக்கூடும். அதில் உறுதியாக காசுமீரம் பற்றிய பேச்சு எழும். இது முத்தரப்பு உரையாடலுக்கு வழிவகுக்கும். சில ஞாயங்கள் உலக அளவில் அம்பலப்பட்டு போகும்! இந்தியா இதுகுறித்து அச்சப்படுகிறது.

முத்தரப்புப் பேச்சை இந்தியா எப்போதும் எதிர்க்கிறது. ஆனால் காசுமீரத்தில் பாக்கிசுத்தான் நடத்தும் நேரடி மற்றும் மறைமுக மீத்தீவிரச் செயல்பாடுகளை மட்டும் உலக அரங்கில் போட்டு உடைக்கிறது. பாக்கிசுத்தானைக் கண்டிக்க எத்தனை நாடுகளை வேண்டுமென்றாலும் இந்தியா கூட்டு சேர்த்துக்



கொள்ளும்.

ஆனால், காசுமீரத்துச் சிக்கல் குறித்துப் பேச மட்டும் நானும் பாக்கிசுத்தானும் மட்டும்தான் பேசுவோம் என்று அடம் பிடிக்கிறது. இது எங்கேயோ இடிக்கிறது. காசுமீரத்தில் இந்தியப் படைகளின் மாந்த உரிமை மீறல்கள், தனிநாட்டுக் கோரிக்கைக்கான வரலாற்று பூர்வமான, நயன்மை அடிப்படையிலான ஞாயங்கள் எல்லாம் வெளிப்பட்டுவிடும் என்று இந்திய நாடு அஞ்சுகிறது. மடியில் கனம் வழியில் பயம்!

அமெரிக்காவில் வைத்து அமெரிக்காவே முன்வந்து உரையாடலில் கலந்து கொள்கிறேன் என்று முயற்சி எடுக்கும்போது இந்தியா மறுக்க முடியுமா? பின்பு பிச்சை போடும் காசைத் தரமாட்டானே!

பேசாமல் முதுகுவலி, வயிற்றுவலி என்று ஏதாவது சொல்லி படுத்துக் கொண்டால் சிக்கல் தீர்ந்தது!

தூங்குகிறவனைதான் எழுப்பலாம். நடிக்கிற இந்தியாவை எழுப்ப முடியாது!!

### தமிழை நடுவணரசின் ஆட்சி மொழியாக அறிவிக்க கருணாநிதி கோரிக்கை!

அட்ரா ராமா! ஜோரா ஒரு தரம் எல்லாரும் கைதட்டுங்க. கருணாநிதிக்கு நடுவணரசில் தமிழை ஆட்சி மொழியாக அறிவிக்க அத்தனை ஆசை! ஆனால் ஆறு கோடி தமிழர்கள் வாழும் தமிழர்நாட்டில் தமிழ்மொழிக் கல்விக்கு சட்டமியற்ற வக்கில்லாத தி.மு.க.அரசை என்ன சொல்வது? குப்பைமேடு ஏறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டத்தைத் தொடப் போகிறானாம்!

### இராச்குமாருக்கு நக்கீரன் கோபால் வழியாக மருந்து, சாமிப் படங்கள், இரசினிகாந்தின் ஒலிப்பேழை அனுப்பப்பட்டன.- இது செய்தி

ஈழத்தமிழர்கள் இலங்கையில் கொல்லப்பட்டபோதும் கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட போதும் உயிர்காக்கும் மருந்துகளும், குருதியும், உடையும் உணவும் கொடுக்க தமிழக மற்றும் நடுவணரசு தடை விதித்தது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மொழியை அழிப்பது இனத்தை அழிப்பதற்காகவே!

மெல்டிழு

ஐரோப்பிய இனங்கள் தாய்மொழியைத் தேடிக் கொண்டிருந்தபோது, இந்தி அரசு நாட்டின் பொதுநிதியைப் பயன்படுத்தி இந்தியை நாடெங்கும் பரப்பவும், உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் செத்த மொழியான சமற்கிருதத்திற்கு உயிர் கொடுக்கவும் தீவிர முயற்சி எடுக்கிறது. இந்திய பன்னாட்டு அரசின் கீழ் உள்ள 'மாநிலங்கள்' தத்தம் மொழிகளை வளர்க்க அரும்பாடு படும்போது தமிழகத்தில் மட்டும் தமிழை வாழ வைக்க தமிழர்கள் பெரும்பாடு படவேண்டியுள்ளது.

உலகின் மூத்த மொழியான தமிழ், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும் எழுத்து வடிவத்தையும், யப்பானிய மொழிக்கு வரிவடிவத்தையும் வழங்கிய தமிழ் இலக்கியச் செழுமை நிறைந்த தமிழ் பல நூற்றாண்டு வரலாற்றை உள்ளடக்கிய தமிழ் இன்று புறக்கணிக்கப்படுவதன் பின்னணி என்ன?

கருத்துப் பரிமாற்றத்திற்குச் சிறந்த தமிழ், பிற மொழிகளை எளிதாகக் கற்றுக் கொள்ளும் வகையில் இலக்கணச் செழுமை மிக்க தமிழ் இன்று புறந்தள்ளப்படுவது ஏன்?

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் முதலில் அவ்வினத்தின் மொழியை அழி என்று கூறினார்கள். இதைத்தான் பெரியார் செய்தார், இப்போது வந்தேறிகளும், அரசியலாளிகளும், பணவெறி கொண்ட கல்வி வணிகர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லாததற்குக் கரணியம் தமிழர் மொழியுணர்வு இழந்ததும், பன்னெடுங்காலமாக அடிமைத்தனத்தில் மூழ்கிக்கிடந்ததுமேயாகும்.

## தாய்மொழிவழிக் கல்வியின் அவசியம்:

ஒரு குழந்தையை கல்விக் கூடத்தில் சேர்ப்பதற்கு முன்பாக அக் குழந்தையுடைய உளவியல் வளர்ச்சியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தை முதலில் தன்னுடைய தாய் வழியாகவும், இரண்டாவது தன்னைச் சுற்றியுள்ள குமுகத்தின் வழியாகவும், அடுத்து தன்னுடைய ஆசிரியர்கள் வழியாகவும் பலவற்றைக் கற்றுக் கொள்கிறது. தாய்மொழியில் கற்கும் போது, அக் குழந்தையின் கற்கும் திறன் அதிகரிக்கிறது.

தாய்ப்பாலும், தாய்மொழியும் ஒன்றிற்கொன்று நெருங்கிய ஒப்புமை உடைத்தது. தாய்ப்பால் ஒரு குழந்தையின் உடல் உள்ள வளர்ச்சிக்கு எவ்வாறு சிறந்ததோ அதுபோலவே தாய் மொழியில் ஒரு குழந்தை கற்பது அதன் சிந்திக்கும் ஆற்றலுக்கு வலுவூட்டுவதாகும். ஆனால் ஆங்கிலம் போன்ற பிறிதொரு மொழியில் கற்பது என்பது அடித்தளத்தை இடித்துவிட்டு விண்ணில் வீடு கட்டுவதற்கு ஒப்பாகும்.

தாய்மொழி வழிக்கல்வி குறித்து ஆய்ந்து அறிக்கையை வெளியிட்ட கோத்தாரி குழுமம் தன்னுடைய அறிக்கையில், "குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வியை தாய்மொழி வழியாகத்தான் கற்பிக்க வேண்டும், பின்னர் ஒரு நாட்டின் தேசிய மொழியைக் கற்பிக்க வேண்டும். அதன்பிறகுதான் அந்நாட்டில் சிறந்த ஒரு மொழியாகக் கருதப்படும் ஒரு மொழியையோ அல்லது ஒரு அன்னிய மொழியையோ கற்பிக்க வேண்டும்" என்று தெளிவுபட எடுத்தியம்புகிறது

குழந்தைகளுக்குத் தாய்மொழி வழியாகக் கற்பிக்காமல் வேற்று மொழியில் கற்பிப்பது என்பது அவர்கள் மீது திணிக்கப்படும் சுமையே! தன்னுடைய இனம், மொழி, பண்பாட்டை அறிய அவர்களுக்கு தடை விதிப்பதாகும். அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி மாந்த நேயத்திற்குப் புறம்பான ஒரு செயல்!

பிறமொழிக் கல்வி முறை என்பது குழந்தைகளின் சிந்தனைகளை மழுங்கடிக்கிறது என்று உலகமே புரிந்து கொண்டபோது ஏன் தமிழினம் மட்டும் அதைப் புரிந்து கொள்ள இயலவில்லை?

கர்நாடகம், ஆந்திரா, கேரளா (தமிழருக்கு எதிரியாக நிற்கும் மாநிலங்கள்) ஆகியன தாய்மொழிவழிக் கல்வியைத்தான் பின்பற்றுகின்றன என்று தமிழருக்குத் தெரியாமலில்லை. மேற்கு வங்காளத்தில் 'வங்கமொழி ஆட்சி' என்று தமிழனுக்குத் தெரியாமலில்லை. பின் ஏன் தமிழுக்கு வாழ்வு கொடுக்க தமிழன் அமைதி காக்கிறான்?

## அரசு ஆணையும் ஆங்கிலமும்:

அண்மையில் தமிழக அரசு எடுத்த முயற்சி பாராட்டுதலுக்குரியது என்றபோதிலும் அதிலும் குறைகள் பல உண்டு. கடந்த ஆண்டு நவம்பர் 19இல் அரசு வெளியிட்ட அறிக்கையில் பயிற்று மொழியாக தமிழ்மொழி என்று இருக்க வேண்டிய இடத்தில் தாய்மொழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், பிற மாநிலத்தவரின் ஏந்திற்காகவே அது அப்படி மாற்றப்பட்டுள்ளது என்று பொருள். இந்த வெளிமாநிலத்தவரின் ஆதிக்கத்திலும், பணவெறியிலும் பலுகிப் பெருகும் கல்விக்கூடங்கள் இன்று ஏராளம் ஏராளம்.

அரசின் ஆணை என்று குறிப்பிட்டால் அதை வழக்கு மன்றத்திற்கு கொண்டுச் செல்ல வாய்ப்பு இருக்கிறது என்று தமிழக அரசுக்கு நன்றாகவே தெரியும். சிறுபான்மை மொழியினர் வழக்கு தொடுப்பார்கள் என்று தொடக்கத்திலேயே உசுப்பி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டவர் தமிழக முதல்வராய் அமர்ந்திருக்கும் தெலுங்கர் கருணாநிதிதான்! மேலும் தமிழக அமைச்சரவையிலுள்ள சற்குணபாண்டியன் போன்ற அமைச்சர்களின் கையில் பல ஆங்கிலவழிக் கல்விக் கடைகள் பெருத்த வருவாயை ஈட்டுவதும் நாம் அறிந்ததே! தி.மு.க. அமைச்சரவையில் எட்டு தெலுங்கர்களும் ஒரு மலையாளியும் (மறைந்த நாஞ்சில் மனோகரன்) உள்ளதையும் நாம் கணக்கில் கட்டாயம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் தெலுங்கர்களுக்கு தெலுங்கு அகாதமி, சென்னைத் தொ(ல்)லைக் காட்சியில் கணிசமான நேரத்தைத் தின்று கொண்டிருக்கும் ஒரு அமைப்பு இது! தமிழகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கும் சிலருக்காக உருது அகாதமி உள்ளது! பின், மலையாள அகாதமி, கன்னட அகாதமி என்று நீள்கிறது!

ஆனால் நூற்றுக்கு எண்பது பேர் தமிழர்களாய் இருக்கும் பெங்களூரில் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் தொடங்க இயலவில்லை. இருந்த எண்ணற்ற தமிழ்ப் பள்ளிகளை கன்னட வெறி அரசுகள் இழுத்து மூடிவிட்டன. ஆண்டுக்கணக்கில் சாக்குப் பையில் மூடிக்கிடக்கும் வள்ளுவர் சிலையைத் திறக்க இயலவில்லை. இதற்கெல்லாம் காரணம் தமிழன் இழந்த தன் மண்ணை இன்னும் ஆளவில்லை.

குழந்தைகளின் வளர்ச்சியையும், மொழியையும் அழித்து அவர்கள் பணம் சம்பாதிக்கிறார்கள்!

குற்றம் நம் பெற்றோர்கள் மீதும் உள்ளது. அதிக பணம் விழுங்கும் பள்ளிகளே நல்ல தரம் உடையவை என்று எண்ணும் மடமை, ஆங்கிலம் பேசுவதே அறிவாளியின் குறியீடு போன்ற நோய்கள் நம் மக்களையும் தொற்றிக் கொண்டு தமிழகத்தைச் சாம்பலாக்கிக் கொண்டிருக்கிறது. ஆங்கில அறிவை மட்டுமே பெருமையாகக் கொள்ளுதல் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடேயாகும்!

ஆங்கிலம் வழியாகத்தான் நுட்பமான அறிவைப் பெற முடியும் என்பதையும் தமிழர்கள் உடைத்து மெய்ப்பித்துவிட்டனர். உலகம் போற்றும் அறிவியலார், அப்தும் கலாம், சிதம்பரம் போன்றவர்களும், இந்தியாவிற்கே வேளாண்மை வளர்ச்சிக் குறித்து ஆய்ந்தறிந்து அறிவித்த சுவாமிநாதன் போன்ற பலரும் தொடக்கக் கல்வியைத் தமிழில் பயின்றவர்களே!

தமிழின் பெருமையை உணர்ந்த ஆங்கிலேயரான ஜி.யு.போப் தன்னுடைய கல்லறையில் "நான் ஒரு தமிழ் மாணவன்" என்று எழுதி வைக்கச் சொன்னார். ஆனால் தமிழனோ தன் மொழியின் சிறப்புக்களைக் குறித்துப் பேச இன்று வெட்கப்படுகிறான்!

| கல்வி நிலை | தெலுங்கு | உருது | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி | 382 | 238 | 45 | 26 |
| நடுநிலைப்பள்ளி | 37 | 16 | 9 | 3 |
| உயர்நிலைப்பள்ளி | 19 | 8 | 1 | 9 |
| மேனிலைப்பள்ளி | 9 | 5 | - | 2 |
| (நன்றி : வேர்கள்) | | | | |

இங்கு தமிழ் மொழி ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் இல்லாத போது தெலுங்கு மொழியைத் தமிழகத்தின் இரண்டாவது ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகம் தீர்மானம் போடுகிறது. தமிழகத்தில் பிற மாநிலத்தவர் பெறும் சலுகைகளில் ஒரு இம்மியையாவது தமிழர்களுக்கு பிற மாநிலங்கள் கொடுக்கிறதா? நாம் இன மானம் கொள்ளாவிடின், மீண்டும் 1956ல் நாம் மண்ணை இழந்தது போல இன்னும் இழக்க வேண்டியது வரும் என்பது திண்ணமே!

இன்று தமிழக அரசின் ஆணையை எதிர்த்து நயன்மை மன்றம் சென்றவர்கள் கல்வியாளர்களல்லர்! மாறாக, கல்வி வணிகர்களேயாவர். முறையாக ஆசிரியப் பயிற்சி பெறாதவர்கள்கூட தெருவுக்குத் தெரு இக் கல்வி வணிகம் செய்கின்றனர். எல்லா விதி முறைகளையும் உடைத்து பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு இந்த வணிகம் இப்போது தெருவெங்கும் நடந்து வருகிறது! இந்த வணிகர்களில் பெரும்பாலோர் இம்மண்ணைச் சாராதவர்களேயாவர் என்பதும் குறிப்பிடத் தக்கது! இந்த மண்ணின் பண்பாட்டையும், சிறு

தமிழ்வழிக் கல்வியைப் புறக்கணிக்கும் ஆங்கில வணிகர்கள் தமிழினத்தின் இரண்டகர்களேயாவர்! தமிழரின் அறிவு நிலையை அழிக்க முற்படும் அந்நியர்களை உருவாக்கும் ஒட்டுண்ணிகளே இவர்கள். தாய்மொழியில் கல்லாதவர்க்கு தாய்நாட்டுப் பற்றும் இராது என்பதே உண்மை!

## ஆங்கில அறிவை மட்டுமே பெருமையாகக் கொள்ளுதல் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடேயாகும்!

வாழ்க்கையில் முன்னேற தாய்மொழிவழிக் கல்வி உதவாது என்று கருதுபவர்கள் உலக அறிவு இல்லாதவர்கள் என்றே கருத வேண்டும். யப்பான் போன்ற நாடுகள் தாய்மொழிவழிக் கல்வியைத்தான் நடைமுறையில் வைத்துள்ளது. உலகம் போற்றும் அறிவியலார்கள் தாய்மொழியில் கற்றவர்களே! முன்னேறிய எல்லா நாடுகளிலும் தாய்மொழிவழிக் கல்வியே நடைமுறையில் உள்ளது.

தமிழகத்தில் ஆங்கில வழிக்கல்விக் கூடங்கள் புற்றீசல் போலப் பெருகியுள்ளன. ஈசலினால் தொல்லைகள் இல்லை! ஆனால் புற்றில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடியிருக்கும் பாம்புகளே அச்சத்திற்குரியவை. "ஆங்கிலக் கல்வியே உயர்ந்தது" என்னும் போக்கினை உருவாக்கி ஏராளமான பணத்தை மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து கறந்து கூத்தடிக்கும் கும்பலே இன்று பேரிடரை ஏற்படுத்துகின்றன. ஏழைகளுக்கு இம்மனநிலை புகுத்தப்படுவதால் தங்களுடைய குழந்தைகள் தாய் மொழியில் படித்தும் பயனில்லை என்ற போக்கினை உருவாக்கி, அவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்வியைப் புறந்தள்ளிவிட்டு சிறு அகவையிலேயே அவர்களை வேலைக்கு அனுப்பும் போக்கு உள்ளது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு சென்னை நகரமேயாகும்.

உலகம் போற்றும் மாமனிதர்கள் நம் மண்ணில் தோன்ற வேண்டுமாயின் தாய்மொழிவழிக் கல்வி உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

சமத்துவமும், குமுக நீதியும் இம் மண்ணில் நிலைபெற தமிழ்வழிக்கல்வி அவசியமாகிறது.

தமிழில் பயின்றவருக்கே தமிழகத்தில் வேலை என்பதை தமிழக அரசு திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

தமிழிலும், தமிழகத்திலும் அனைத்தும் உண்டு என்பதை தமிழர்கள் புரிந்து பெருமை கொண்டு தமிழ் மண்ணிற்குப் பெருமை சேர்ப்போம்.

## எச்சரிக்கை!
## தமிழை அழிக்க முற்படும் மத்திய மற்றும் மாநில அரசுகள்!

பள்ளிக் கல்வி இயக்குனர், சென்னை 6 என்ற முகவரியிலிருந்து 23.09.99 அன்று வெளியிட்ட ஆணையில் (ஆணை எண் : 110299 - டி1-99) கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

1. சமற்கிருதம் கற்பிக்கும் மேல் நிலைப் பள்ளிகளுக்கு 100 விழுக்காடு பொருளுதவி அளிக்கப்படும்.

2. சமற்கிருதத்தைத் தரப்படுத்துவது

3. சமற்கிருத ஆய்வுகளுக்கும், ஆய்வுத் திட்டங்களுக்கும் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்வது

4. நடுவணரசின் பல்கலைக்கழக நன்கொடைகளை இத் திட்டங்களுக்காகச் செலவிடுவது.

மேற்கண்ட இந்த ஆணை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்பட்டு சமற்கிருதம் பயில விரும்பும் மாணவ மாணவியரின் பட்டியல் கேட்கப்பட்டுள்ளது.

உலகில் வாழும் 10 கோடி மக்களின் உயிரோட்டமுள்ள மொழியாக தமிழ் இருக்க, செத்துச் சுடுகாட்டுக்குப் போன சமற்கிருதத்தைத் தூக்கி நிறுத்த அரசு ஆணைகள் பறக்கிறது என்றால் வடுகப் பிராமணரின் ஆதிக்கம் எவ்வளவு உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பிராச்சார் பாரதி, கர்நாடகத்தில் வாழும் தமிழர்களுக்காக சென்னையிலிருந்து ஒளிபரப்பப்படும் தமிழ் அலைகளை நீக்கிவிட்டு இந்தி அலைகளை புகுத்தியுள்ளது. இதற்கு தமிழக அரசும் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் அங்குள்ள ஒரு அமைப்புதான் இதைப் பண்பாட்டுச் சீரழிவு என்று எதிர்த்துள்ளது.

இது குறித்து அருண் செயிட்லி எனும் நடுவணரசின் அமைச்சர் பேசுகையில், "திறமையான மாநில அரசினால்தான் (தமிழக அரசு) திடமான நடுவணரசை (பார "தீய" சனதா அரசை) உருவாக்க முடியும்! தமிழக அரசு நடுவணரசின் மொழிவழிக் கொள்கைக்கு ஒத்துப் போகிறது" என்று கூறியுள்ளார்.

இறுதியாக, தமிழுக்காகக் குரல் கொடுக்கும் ஹாலந்து நாட்டுத் தம்பதியர் ஆர்ட்டின் ஜேன்சன், ஹெல்கி ஆகியோர் தமிழினத்திற்கு கீழ்க்கண்டவாறு கூறுகின்றனர்.

"வாழ்வில் முன்னேற்றம் தேவைதான். ஆனால், வேர்களையும், மரபுகளையும் அறுத்தெறிந்துவிட்டு அல்ல! உங்கள் நாடு எவ்வளவோ வளர்ந்துவிட்டது. அதற்காக கோயில்களை இடித்துவிட்டா கட்டடம் கட்டுகிறீர்கள்? மொழியும் அப்படித்தான்! தமிழ் உங்கள் கோயில். அதை இடித்துவிடாதீர்கள்!"

**உங்கள் ஊரில் தமிழர்களம் அமைக்கும் பணியைத் தொடங்கி விட்டீர்களா?**

**நினைவிருக்கட்டும், தமிழர்கள் மட்டுமே தமிழர்களத்தில் இணையலாம்!**

**கள உறுப்பினர்களே, மண்ணுரிமை புத்தகத்தை வாசித்து முடித்துவிட்டீர்களா?**

மாநில அமைப்பாளர்

### என் தமிழ்

காலம் இரண்டாயிரம் ஆயும்
களப்பிரர், வெள்ளையர் வந்து போயும்,

சீலம் அழியாத் தமிழே!
தனித்தேனே, சாவா மருந்தே!

ஆல் போல்நின்ற பெருமரமே
அழியாது ஒடியாது காலத்தின்

கோலம் வரைந்த நற்றமிழே
நீ வாழ்க! நீ வெல்க!!

மணிகண்டன் - வெள்ளாளப் பாளையம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எது வந்தவர்களின் மொழி?

பெங்களூரிலிருந்து வெளியாகும் டெக்கான் கெரால்ட் எனும் ஆங்கில நாளேட்டில் 9.8.2000 அன்று வெளியான கடிதங்கள் பகுதியில் துவாரகநாத் என்பவர் தவறாக சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

வீரப்பனின் கோரிக்கையான தமிழை இரண்டாம் ஆட்சி மொழியாக கர்நாடகத்தில் அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தூக்கிப் போட்டு உடைக்க வேண்டும். கன்னடர்களுக்கு அடுத்து உருதும், அடுத்து தெலுங்கும் அதற்குப் பிறகுதான் தமிழும் மராத்தியும் பேசும் மக்கள் எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர் என்றும் மேலும் தமிழ் என்பது இங்கு குடியேறியவர்களின் மொழி என்றும் குறிப்பிடுகிறார்.

பெங்களூருடைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை முதலில் பார்ப்போம்.

| ஆண்டு | மொத்த மக்கள் தொகை | தமிழர்கள் | கன்னடர்கள் | தெலுங்கர்கள் |
|---|---|---|---|---|
| 1911 | 189, 485 | 61,172 | 33,612 | 47,423 |
| 1921 | 237, 496 | 76,921 | 46,356 | 45,952 |
| 1931 | 306,470 | 97,615 | 64,034 | 61,432 |
| 1941 | 406,760 | 124,334 | 97, 899 | 76,286 |
| 1971 | 1,866,754 | 432,603 | 624,545 | 310,575 |

(நன்றி: பெங்களூர் எங்களூர்)

1941 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு வரை பெங்களூரில் கன்னடர்களைவிட தமிழர்களே அதிகமாக இருந்தனர் என்பதை அரசின் கணக்கெடுப்பே தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் 1961 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பிலிருந்து கன்னட அரசு பல தில்லு முல்லுகளைச் செய்து கன்னடர்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றே கூட்டிக் காண்பித்தது. அதன் விளைவை 1971 ஆம் ஆண்டு சொல்லும் "பொய்யைப்" பாருங்கள் திடீரென கன்னடர்களின் எண்ணிக்கை தமிழர்களைவிட இரண்டு இலக்கத்திற்கு மேல் எகிறியது. கன்னடம் பேசத் தெரிந்த தமிழர்களையெல்லாம் கன்னடர்களாக அடையாளம் காட்டிக் கொண்டனர். அது போக பழந்தமிழர்களான திகிழர்களையெல்லாம் கன்னடர் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர்.

துவாராகநாத்தின் விருப்பப்படிப் பார்த்தால் பெங்களூரில் ஆட்சி மொழியாக இருக்கவேண்டியது தமிழ்தான். கன்னடம் அல்ல!

அடுத்து தமிழ் இல்லையென்றால் கன்னடம் என்ற மொழியே உருவாகியிருக்காது என்ற உண்மையையும் அவர் புரிய வேண்டும்.

ஓரிரு இலக்கம் கன்னடர்களே தமிழகத்தில் உள்ளனர். ஆனால் பல இடங்களில் தமிழர்கள் கன்னடத்திற்கு இணை ஆட்சிமொழி எனும் தகுதியைக் கொடுத்துள்ளனர் அதைத் திரும்பப் பெற்றுவிடலாமா?

கெம்பேகவுடாவும், மஸ்தி வெங்கடேச ஐயங்காரும் கன்னடர்கள் என்று கருதிக் கொண்டு கன்னடர்கள் அவர்களின் சிலைக்கு மாலையும் மரியாதையும் செய்து வந்தனர். ஆனால் அவர்கள் தமிழர்கள் என்று அறிய வந்தபோது கமுக்கமாய் கழன்று கொண்டனர்.

இந்த இராச்குமாரும்தான் யார்? தாளவாடிக்கு அருகிலுள்ள கஞ்சனூரில் (காஜனூர் அல்ல!) பிறந்த முத்துராச் கவுண்டர்தானே! அம்மா தமிழர், அப்பா தெலுங்கர்! சொல்லப் போனால் கன்னடருக்கு என்னதான் சொந்தம்? மொத்தக் கருநாடகத்திலும் 37 விழுக்காட்டினர்தான் கன்னடர்கள்!

இராச்குமார் தற்செயலாகத்தான் கன்னடத்தில் நடிக்க வந்தார். வேறெந்த மொழிக்காவது போயிருந்தால் கன்னடர்கள் கதியும் வேறுதான்.

அதுசரி தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள கன்டர்களான அர்ச்சுன், மோகன், செயலலிதா, பிரபுதேவா, அரவிந்தசாமி, பிரகாசுராச், முரளி போன்றவர்களை என்ன செய்வது? ஓட்டிவிடலாமா?

துவாரகநாத்தும், டெக்கான் கெரால்டும்தான் சொல்ல வேண்டும்.

**தங்கவயல் புஷ்பராச்.**

### காஜனூரல்ல! கஞ்சனூர்!!

ஊர்ப் பெயர்களை மாற்றுவதில் சிங்களனுக்கு மிஞ்சியவன் கன்னடன்தான்.
தமிழ்ப்பகுதிகளில் வலிந்து குடியேற்றம் செய்து விட்டு மளமளவென்று அந்த ஊர்ப் பெயர்களையெல்லாம் கன்னடப்படுத்தி, வரலாற்றை அழிப்பதில் கன்னடர்கள் எப்போதும் குறியாய் இருப்பார்கள். இதற்கு ஆயிரக்கணக்கான எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். எருமையூரை (மையூர் - மைசூர்) மைசூர் என்றும், மங்கல ஊரை மங்களூர் என்றும், விண்ணமங்கலத்தை பின்ன மங்கலா என்றும், சோழமங்கலத்தை கோரமங்கலா என்றும் இதுபோன்று எண்ணற்ற திரிபுகளைச் செய்துள்ளார்கள்.
இப்போது செய்திகளில் அடிக்கடி அடிபடும் தாளவாடிக்கு அருகிலுள்ள இராச்குமாரின் ஊர் இவர்கள் அழைப்பது போல காஜனூரல்ல, கஞ்சனூர் என்னும் தூய தமிழ்ப் பெயரே!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

?!

# வினா விடை

'தேசியம்' என்பது தமிழ்ச் சொல்லா?
**தமிழ்ப்பித்தன்**

கழகக் காலத்தில் புலவர்கள் தே எம் என்னும் சொல்லை நாடு என்னும் பொருளில் வழங்கினர். பின்னாளில் தேஎம் என்னும் சொல் தேயம் ஆயிற்று. (தே + அம் = தேயம் 'ய'கரம் உடம்படுமெய்)

வடமொழிப் பிராமணர்கள் நேயம் என்னும் தமிழ்ச் சொல்லை நேசம் என்று திரித்தது போன்று தேயம் என்னும் சொல்லை தேசம் என்று திரித்தனர். தேசம் என்னும் சொல்லுடன் பின்னொட்டாக இயம் சேர்ந்து தேசியம் ஆயிற்று. தேசம் + இயம் = தேசியம் ஆவதற்கு தமிழில் இலக்கணம் இல்லை. இயல்பு புணர்ச்சியாயின் தேசம் + இயம் = தேசமியம் என்னும் விகாரப் புணர்ச்சியாயின் தேச + இயம் = தேசவியம் என்றும் புணர வேண்டும். தேசியம் வடிவில் தமிழாக இல்லையென்றாலும் வடமொழியன்று. எனவே அறிஞர்கள் அதைத் தமிழாக ஏற்றனர். தேசியம் ஏற்புடையதாக இல்லையாயின் அதற்குப் பகரமாக 'நாட்டியல்' (நாடு+இயல்) என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம். பாவாணரும் நாட்டினம், நாட்டியல் எனும் சொற்களைக் கையாண்டுள்ளார். (கோப்பெருஞ்சோழன்)

எங்கள் ஊரான அருப்புக்கோட்டையில் தமிழரின் (முத்தரையரின்) நிலங்கள் அனைத்தும் தெலுங்கர் வசமாகி வருகிறது! இதைத் தடுக்க வழி உண்டா? இழந்த நிலங்களை முத்தரையர்கள் பெற வழி உண்டா? எங்கள் பகுதியில் மோதிக் கொள்ளும் தமிழர் சாதிகளான பள்ளர், பறையர், முத்தரையர், முக்குலத்தோர் இவர்களுக்கிடையே உள்ள பகை உணர்வு நீங்க வழி உண்டா?
**அருவைத் தமிழன்பன்**

சாதிச் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர இனச் சண்டை தொடங்க வேண்டும். தமிழனுக்கு தன்னுடைய எதிரி யார்? என்று இன்னும் புரியவில்லை. புரிய வைத்துவிட்டால் கணக்கைச் சரி பார்த்துவிடலாம். எதிரி யார்? நண்பன் யார்? எனும் அடிப்படைத் தெளிவின்றி இன மீட்புப் போராட்டத்தைத் தொடங்க முடியாது.

தமிழர் தமிழ் நிலத்தை மாற்றினத்தாரிடம் இழந்த வரலாறு என்றோ தொடங்கிவிட்டது. சூழ்ச்சி, கயமை, கடைந்தெடுத்தக் களவானித்தனத்தைப் பயன்படுத்தியே வடுக வந்தேறிகள் நம் மண்ணைக் கவர்ந்து வைத்துள்ளனர். இன்றும் அது தொடர்கிறது. இதிலிருந்து நாம் மீள வேண்டுமாயின் சட்டம் மட்டும் நமது மண்ணை நமக்கு மீட்டுத் தராது! முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்.


**புலவர் இளங்குமரனார் எழுதிய**

தமிழ்வளம் - சொல் (40ரூ)
திருக்குறள் - கருத்துரை (25ரூ)
திருக்குறளின் தனிப்பெருஞ் சிறப்புகள் (20ரூ)
தமிழர் திருமணம் (பாவாணர்) (20ரூ)
சிற்றருவி (குழந்தைப்பாடல்) (30ரூ)
இன்ப வாழ்வு (16ரூ),
நாடும் மொழியும் நம்மிரு கண்கள் (20ரூ)
மனவளப்பயிற்சி (20ரூ)
மாணவர் மாண்பு (24ரூ)
வாழ்வியல் வழிநடை (20ரூ)
வாழ்வியில் வளம் (50ரூ)
வள்ளுவர் வழியில் தவம் (6ரூ)
வள்ளுவர் வழியில் வறுமையும் வளமையே (6ரூ)
கபிலர் அகவல் (5ரூ)
மங்கல மனையறம் (8ரூ)
திருக்குறள் ஆராய்ச்சி (முதல் தொகுதி) (60ரூ)
திருக்குறள் ஆராய்ச்சி (இரண்டாம் தொகுதி (60ரூ)
ஊருக்கு ஒருவர் (10ரூ)
திருக்குறள் ஒப்புரிமை (10ரூ)

**வேர்கள் முகவரியில் புத்தகங்கள் கிடைக்கும்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நான் அடிப்பது போல அடிக்கிறேன்!
நீ அழுவது போல அழு!!

## உச்ச நயன்மை மன்றமும் கர்நாடகமும் ஆடும் நாடகம்!!

இப்போது பாதுகாப்புத்துறை அமைச்சராக இருக்கும் சார்ச் பெர்ணான்டசு மீது வெடி குண்டு வழக்கு இருந்தது. ஆனால் தேர்தலில் நின்று அவர் அப்போது அமைச்சரானார். அரசு முன்வந்து வழக்கைத் திரும்ப பெற்றுக் கொண்டது, பன்சிலால், பூலான்தேவி என்று அரசியலாளிகளின் பல குற்றங்கள் வழக்கு மன்றத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வரலாறு உண்டு!

வி.பி.சிங் ஆட்சி காலத்தில் முக்தி முகமது சாகிப்பின் மகள் கடத்தப்பட்டார். அரசு பணிந்து அவர் மகளை மீட்டது. காந்தகார் வானூர்திக் கடத்தலில் வெளியுறவுத்துறை அமைச்சரே காசுமீரப் போராளிகளை அழைத்துச் சென்று விடுவித்துவிட்டு வந்தார். நேற்றுவரை இசுபுல் முகாயுதீன் அமைப்பினர் அரசின் பார்வையில் ஒரு அரட்டல் இயக்கம். ஆனால் அரசு அவர்களோடு அமர்ந்து பேசும்போது பழையதெல்லாம் பட்டென்று அரசுக்கு மறந்து போகிறதாம்.

ஆனால் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக மைசூர் சிறைகளில் வாடுகிறவர்கள் அப்பாவிகள், பெண்கள், அகவை முதிர்ந்த முதியவர்கள். வீரப்பனை எட்டிப் பார்க்க முடியாத அதிரடிப்படைகள் கண்ணில் கண்டவர்களையெல்லாம் பிடித்துக் கொண்டு வந்து சிறையில் தள்ளியது!

உச்ச நயன்மை மன்றம் கர்நாடக அரசைக் கேட்கிறது, "எட்டு ஆண்டுகளாக வீரப்பனைப் பிடிக்காமல் என்ன செய்தீர்கள்? உங்களால் முடியாவிட்டால் அடுத்தவருக்கு வழி விடுங்கள்!" என்று.

அது சரி! எட்டு ஆண்டுகளாக உங்களுடைய மைசூர் நீதி மன்றம் கட்டை விரலைச் சூப்பிக் கொண்டா இருந்தது? எட்டு ஆண்டு உசாவலிலும் இந்த அப்பாவிகளின் வழக்கு முடியவில்லையே! செத்து மண்ணுக்குள் போன தடாச் சட்டம் இவர்கள் மீது இருந்து மட்டும் விலகவேயில்லையே அது ஏன்

அது சரி, இந்த அப்பாவிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள்தான் என்ன? காவல் துறையினரைக் கொன்றார்கள்! கொல்ல உதவினார்கள் என்றுதானே! 55 காவலர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று மூக்கைச் சீந்திச் சீந்தி ஒப்பாரி வைக்கிறார்கள். அரசு தன் கடமையைச் செய்ததால்தானே 55 பேர் செத்தார்கள்!?

வீரப்பனைப் பிடிக்க முடியாதது வீரப்பனின் திறமையினாலா? அல்லது இது அரசின் கையாலாகாத்தனமா? என்பதை வேறொரு தளத்தில் உசாவலாம். ஆனால் வீரப்பனைப் பிடிக்க அரசு தலைகீழாக நின்றுதான் முயன்றது. உளவாளிகள், அதிரடிப்படை, அதிர்ச்சியே இல்லாத படை, என்று பல வழிகளில் முயன்றுதான் தோற்றுள்ளது.

இதுவெல்லாம் புரியாமலா அரசும், நயன்மை மன்றமும் இப்போது நாடகம் ஆடுகிறது! கர்நாடக அரசு இனி வீரப்பனிடம் "பாருங்கள் நாங்கள் முயன்று பார்த்துவிட்டோம், இனி இது எங்கள் கையில் இல்லை! பார்த்து ஏதாவது செய்யுங்கள்" என்று மன்றாடும்!

வீரப்பனை ஏமாற்ற இது இன்னொரு நாடகம்! திரைக் கதை வசனம் யாராக இருக்கும்? திருக்குவளை வசன கர்த்தாதான்!

**வெற்றிக்கனல்**

## மூன்று தமிழர்களுக்கு தமிழ் உள்ளங்களின் இனிய பாராட்டுக்கள்!

அற்புதம்
தங்கவயல் தமிழர்!
மும்பாய் நகரில் ஏழைமக்களின்
நல்வாழ்வுக்காக உழைப்பவர்!
இந்த ஆண்டு மகசசே விருது பெற்றவர்



அருணா
மகசசே விருதுபெற்ற மற்றொரு தமிழர்!
இந்திய ஆட்சிப் பணியைத் துறந்து
அடித்தட்டு மக்களின் விடுதலைக்காக
பாடுபடுகிறவர்.



விசயராகவன்.
ச்ராம் சிரி விருது பெற்றுள்ளார்.
சிறப்புத்தகுதிக்கான விருது இது!
பெங்களூரிலுள்ள வானூர்தி ஆய்வு
மையத்தில் வியத்தகு ஆய்வு
செய்திருப்பவர்!



www.tamilarangam.net

# யூதமயமாக்கத்தால் வந்த வினை!

**குணா**

*(25.6.2000 அன்று டி. ஆர். டி., பிரான்சு வானொலிக்கு வழங்கிய செவ்வி)*

டி. ஆர். டி நேயர்களுக்கு என் வணக்கம்.

மேடலின் ஆல்பிரைட் ஒரு யூதப் பெண்மணி. அமெரிக்காவின் அரசுச்செயலர். அந்த அமெரிக்காவின் வெளிவுறவுத்துறையை வழிநடத்துவது அவருடைய பணி. அமெரிக்க அரசியலில் விளங்கும் யூதரின் மேட்டிமையைப்பற்றி எல்லாருக்கும் தெரியும். ஆனால், அதன் வெளிவுறவுத்துறையை இந்த யூதக்கிழவி கைப்பற்றியது, அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கையில் ஒரு திடீர்ப்புரட்சியே என்பது பலருக்குத் தெரியாது. அமெரிக்காவில் பிறக்காமல் இன்னொரு நாட்டில் பிறந்த ஒருவர், அந்த அமெரிக்காவின் அரசுச்செயலராவது இதுவே முதல்முறையாகும். அமெரிக்கா இதுவரை கடைப்பிடித்து வந்த அயலுறவுக் கொள்கையையே இந்த யூதக்கிழவி தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டார்.

உலகெலாம் தலைதூக்கியுள்ள தேசிய இனங்களின் எழுச்சிகளையெல்லாம் வெற்று அரட்டல் வழி (அதாவது, பயங்கரவாத) இயக்கங்களாக்கி — அவற்றையெல்லாம் கொடிய பூதங்களாகத் திரித்துக் காட்டி — அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கையில் பெரிய திரிபை ஏற்படுத்தியவர் இந்த ஆல்பிரைட்.

பாலத்தீன-இசுரேலியப் பூசலில் நடுவம் செய்ய வந்த இந்த யூதக் கிழவி, மண்ணே இல்லாமல் மண்ணுக்காகப் போராடி வரும் பாலத்தீனியரில் ஒரு மென்போக்கினரான யாசர் அராஃபத்தை அடையாளம் கண்டு தெரிந்தெடுத்து அவர் ஊடாக ஒரு பாலத்தீனத் தீர்வைத் திணிப்பதில் வெற்றி கண்டுள்ளார். அதன் விளைவாக, பாலத்தீனத்திற்கு ஒரு தனிப்படையைக் கட்டிக்கொள்ளும் அதிகாரம்கூட இல்லை. தனி நாடு என்றால், தனியே ஒரு படை இருக்க வேண்டாமா? பாலத்தீன ஒப்பந்தத்தின்கீழ் அராஃபத்துக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு தனி ஊர்க்காவல் படை மட்டும்தான்! இவ்வாறு ஒப்புக்கு ஒரு அதிகாரத்தை அராஃபத்துக்குக் கிளிண்டன் அரசு அளித்துள்ளது! செருப்புக்கேற்பக் காலை வெட்டிய இந்தத் தீர்வுக்குப் பின்னிருந்தது அந்த யூதக்கிழவி ஆல்பிரைட். இத்துடன் நில்லாது, அமெரிக்க வெளியுறவுக் கொள்கையையே ஒட்டுமொத்தமாக இசுலாமியருக்கு எதிராகத் திருப்பிய திருப்பணியும் இக் கிழவியால் வந்த வினையேயாகும்.

## தேசிய விடுதலை இயக்கங்கள் அரட்டல் இயக்கங்களாம்!

சிங்களரின் இனவெறியிலிருந்தும் இனஒழிப்பிலிருந்தும் மீள்வதற்கென விடுதலைக் களமாடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பு ஓர் அரட்டல் (பயங்கரவாத) இயக்கமாக அறிவிக்கப்பட்டு அமெரிக்காவில் தடை செய்யப்பட்டதும் இந்த யூதக்கிழவியால்தான். அமெரிக்கா இவ்வாறு தடை செய்தவுடன், அதன்கீழ் அணிவகுத்து நிற்கும் கனடாவும் ஐரோப்பிய நாடுகள் சிலவும் அவ்வாறே செய்தன. தமிழீழ விடுதலைப் போருக்குத் துணைநிற்க வேண்டி, புலம்பெயர்ந்த தமிழர்கள் நன்கொடையும்கூடத் தண்டித் தரக்கூடாது என்னும் கொடிய ஆணையையும் பிறப்பித்தன. போராளிகள் சிலரை நாடு கடத்தவும் பார்த்தன. தமிழரின் தனிநாட்டுரிமை வேட்கையைக் குலைக்கவும் நெரிக்கவும் முற்பட்டுச் சிங்கள இனவெறிக்கும் இனவொழிப்புக்கும் தோள் கொடுத்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வியத்தகு அமைப்பியல் கட்டமைப்பும் சிறப்பும், கொள்கை உறுதியும், தளராத வினைபாடும் எத்தனை இன்னல்கள் விளைந்திடினும் தமிழீழ விடுதலை என்னும் பெரும்பாட்டையில் தளராது செல்வதெனத் தமிழீழத் தமிழர்களைத் தூக்கி நிறுத்தியது. அமெரிக்க வல்லரசின் நிலைப்பாட்டிலும் — அதைத் தழுவி, பிற மேலைநாடுகளிலும் — எற்பட்ட இந்தத் தலைகீழ் நிலையை — பிறழ்ச்சியை — துணிந்து எதிர்கொள்ளும் வலிமையை அவர்களிடம் விதைத்தது.

தனிநாட்டுரிமை (the right of self-determination) என்னும் செவ்வியக் கோட்பாடு, ஐரோப்பாவில் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் கால்கொண்டது. சுலாவிய நாடுகள் பல தனித்தனித் தேசிய அரசுகளாகும் (Nation States) தகுதி உடையன்வாயினும், பன்னாட்டின அரசுகளில் அடிமைப்பட்டுக் கிடந்தன. ஒரு பெருந்தேசிய இனம் பிற தேசிய இனங்களை அடக்கியாளும் கொடுமையை இனியும் பொறுக்க முடியாது என்று அவை கிளர்ந்தெழுந்தன. பன்னாட்டின அரசாயிருந்த சாரிய உருசியாவிலும், பிற சுலாவிய அரசுகளிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இத்தகைய போக்கு மேலோங்கியது. ஒடுக்குண்ட தேசிய இனங்களுக்குத் தனிநாட்டுரிமை வேண்டும் என்னும் கூக்குரல் அதனால் எழுந்தது. தத்தம் தேவைகளையும் சூழல்களையும் வாய்ப்புகளையும் கருதித் தனிநாடாகும் உரிமை ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உண்டு என்று இலெனின் மிகத் தெளிவாக வரையறுத்தார். பிரிந்துபோகும் உரிமைக்கான மறுபெயரே தனிநாட்டுரிமை என மிகத் துல்லியமாக விளக்கவும் செய்தார்.

இலெனின் வடித்த இந்தத் தனிநாட்டுரிமைக் கோட்பாடு பழைய சோவியத் ஒன்றியத்தில்கூடப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயரளவுக்குத்தான் இருந்ததேயன்றி, நடைமுறையில் இருக்கவில்லை. ஒப்புரவு (சோசலிசம்) என்னும் பெயரில் தேசிய இன ஒடுக்கலும் சுரண்டலும் நீடித்தன. அதன் விளைவாகவே, ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுகள் கழித்து சோவியத் ஒன்றியம் உடைந்து சிதறியது.

## பலபட்டறை அரசுகளும் நான்காம் உலக நாடுகளும்

அமெரிக்கா, உருசியா ஆகிய இரு பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான பனிப்போர்க் காலத்தில், பிற பன்னாட்டின அரசுகளில் இருந்த பெருந்தேசிய இனங்களை எதிர்த்துக் கிளம்பிய ஒடுக்குண்ட தேசிய இனங்களின் போராட்டங்களை சோவியத் வல்லரசு பொதுவாக ஆதரிக்கவில்லை. ஆப்கானித்தானமும் பர்மாவும் உள்ளிட்ட தெற்காசியாவில் அமைந்த அரசுகள் எல்லாம் ஆங்கிலேய வந்தேறிகளால் செயற்கையாகவும் வலியவும் உருவாக்கப்பட்ட அரசுகளாயிருந்தன. அப்படியிருந்தும், அங்கிருந்த தேசிய இனங்களின் விடுதலை வேட்கைகளைச் சோவியத் வல்லரசு ஆதரிக்கவில்லை.

அன்று, அமெரிக்காவும் உருசியாவும் முதல் உலகு எனச் சொல்லப்பட்டன. வளர்ந்த ஐரோப்பிய நாடுகளும் யப்பானும் இரண்டாம் உலகம் ஆயின. இந்த இரு உலகங்களுக்கும் அப்பாலிருந்த நாடுகள் — உள்ளபடியே அரசுகள் — எல்லாம் பன்னாட்டின அரசுகளாயிருந்தன. இவற்றையே மூன்றாம் உலகு என வரையறுத்தனர். இந்த மூன்றாம் உலகே முதலிரு உலகங்களால் கடுமையாகச் சுரண்டப்பட்டுவரும் அடிப்படை உருப்படி என்று சொல்லி, பெரிய கருத்துக் குழப்பத்தை விளைவித்தனர். இந்தக் குழப்புதலுக்குச் சீனமும் சோவியத் வல்லரசும் துணைபோயின.

ஆனால், மூன்றாம் உலக நாடுகள் என யாதுமில்லை. மூன்றாம் உலக அரசுகள் மட்டுமே உண்டு. இந்த மூன்றாம் உலக அரசுகளில் பெரும்பாலானவை தத்தம் பிடிகளுக்குள் அடங்கிய வெவ்வேறு தேசிய இனங்களையும் மொழிகளையும் பண்பாடுகளையும் வரலாறுகளையும் கொண்ட அடிப்படை நாடுகளைக் கொண்டவை. அவற்றையெல்லாம் நாடுபறிப் போர்களின் வாயிலாகப் பிடித்த ஐரோப்பிய வந்தேறிகள், செயற்கையாகவும் வலியவும் கட்டிச் சில பலபட்டறை அரசுகளை உருவாக்கினர் என்னும் உண்மையை முதல் உலக நாடுகளும் இரண்டாம் உலக நாடுகளும் வேண்டுமென்றே மூடி மறைத்தன. கொடிய கொடுங்கோலர்களும் முடிச்சுமாறிகளும் வீரார்ப்புப் பேசிவந்த போலிகளுமே இந்த மூன்றாம் உலக அரசுகளை ஆண்டு வந்தனர். மூன்றாம் உலக அரசுகளில் அடிமையுண்டு கிடந்த அடிப்படைத் தேசிய அரசுகள் எல்லாம் அடக்கியாளப்பட்டு வந்த மெய்ம்மையும் அவற்றிற்குத் தெரியும். மூன்றாம் உலக அரசுகளின் கீழ் இவ்வாறு ஒடுக்குண்டு கிடக்கும் நாடுகளே அடிப்படைத் தேசிய அரசுகள். இவைதான் நான்காம் உலகமாக விளங்குகின்றன. முதல் இரு உலகங்களும் இந்த உண்மையைக் காண மறுத்தன.

இலங்கைத்தீவை எடுத்துக்கொள்வோம். இலங்கை ஓர் ஈரின அரசு. தமிழ்த் தேசிய இனமும் சிங்களத் தேசிய இனமும் ஆங்கிலேயரால் இலங்கை என்னும் அரசின்கீழ் வலிய இணைக்கப்பட்டு — குறிப்பாகத் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பும் அடையாளமும் முற்றாக மறைக்கப்பட்டு — இல்லாத பொல்லாத இலங்கைத் தேசிய இனம் பொய்யாகக் கற்பிக்கப்பட்டது. இலங்கைத் தேசிய இனம் என்னும் அடையாளம், சிங்கள இனத்தின் பெருந்தேசிய இனவெறியையும் இன அகந்தையையும் இன ஒடுக்கலையும் குறிப்பதாகவே இருந்தது.

அதைவிடக் கொடுமை, இல்லாத இந்தியத் தேசிய இனத்தை — இந்தியா என்னும் பன்னாட்டின அரசை — அதாவது, ஒரு பலபட்டறை அரசை — ஆங்கிலேயர்கள் கற்பித்ததாகும். அந்த இந்தியத் தேசிய இனம், அதே ஆங்கிலேயர்கள் கற்பித்த 'இந்து' என்னும் மதத்தைத் தழுவியது. ஆப்கானித்தானமும் பாக்கித்தானமும் பர்மாவும் கூட அவ்வழியில் பலபட்டறை அரசுகளாக உருவாக்கப்பட்டவைதான். அந்த நாடுகளின் மக்களும்கூட மதவழியில் அடையாளப்படுத்தப்பட்டனர். தனித்தனித் தேசிய இனங்களின் தாயகங்களாக அவை கண்கூடாக இருக்கும் மெய்ம்மை வேண்டுமென்றே மறைக்கப்பட்டது.

## தேசிய இனங்களை மறைத்தனர்!

ஆங்கிலேயர் உருவாக்கிய இலங்கை அரசின்கீழ், பவுத்தர் பெரும்பான்மையாம்; தமிழர் சிறுபான்மையாம். வெங்காயம்! பெரும்பான்மையருக்கு அடங்கிச் சிறுபான்மையர் வாழவும், சிறுபான்மையர் பெரும்பான்மையரை மதித்து நடக்கவும் வேண்டும் என ஆங்கிலேய வந்தேறிகள் பாடம் படித்தனர். ஆனால், இலங்கைத்தீவில் இருப்பனவோ, தமிழர், சிங்களர் என்னும் இருவேறு தேசிய இனங்கள். தேசிய இனங்களுக்கு இடையில் பெரியவன், சிறியவன் என்னும் பாகுபாடு என்ன வேண்டிக் கிடக்கிறது? எல்லா இனங்களும் சமம் என்றுதானே இருக்க வேண்டும்? இங்கு மதம் பிடிப்பானேன்? மத அடிப்படையில் தேசிய இனங்களைப் பெரிது, சிறிது எனப் பிரிப்பது குறிப்பாக ஆங்கிலேய வந்தேறிகளின் குறும்புதானே?

அதே போல், தமிழன், தெலுங்கன், கன்னடன் மலையாளி, இந்தி பேசும் இந்தியன், அசாமியன், வங்காளி, காசுமீரி, நாகன் முதலான தனித்தனித் தேசிய இனங்கள் இருப்பதை முழுப் பூசுணைக்காயைச் சோற்றில் மறைப்பது போல் மறைத்து — இந்தத் தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் தனித்தனித் தேசிய அரசுகள் எனப்படும் உருப்படிகள் என்னும் மெய்ம்மையை மறைத்து — இவை யாவும் நான்காம் உலக நாடுகள் என்னும் உண்மையை மறைத்து — இந்தியாவென்னும் பன்னாட்டின அரசுக்குள் அடங்கிய மக்களைப் 'பெரும்பான்மை இந்துக்கள்' என்றும், 'சிறுபான்மை முசுலிம்கள்' என்றும் மத

www.tamilarangam.net

வழியில்தானே பாகுபடுத்தினான் அதே ஆங்கிலேயன்?

புஷ்ட்டுகள், அசாரர்கள், தாசிக்கியர், உசுபெக்கியர், பலுச்சிகள் ஆகிய தனித்தனித் தேசிய இனங்களின் தாயகங்களையெல்லாம் வன்போர் வழியில் கவர்ந்து, மத அடிப்படையில் அவற்றைப் பலபட்டறை அரசுகளாகச் செய்தவனும் அந்த ஆங்கிலேயன் தானே?

இத்தகைய சான்றுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

## யூதமயமாக்கம்

இந்தக் கோணல் வழியில் இன்றைய அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கையை யூதக்கிழவி மேடலின் ஆல்பிரைட் மடைதிருப்பிக் குழப்பி வருகிறார். இந்தச் செயற்கையான பொய் விளக்கத்தை — அழிம்புப் போக்கை — அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் 'புதிய ஆங்கிலேயமயமாக்கம்' என்பதை விட, அதன் யூதமயமாக்கம் என்று சொல்வதே பொருந்தும்.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் இந்த யூதமயமாக்கத்தால் அமெரிக்கா இதுவரை கொண்டிருந்த நண்பர்கள் எல்லாரும் எதிரிகளாக்கவும், அதன் எதிரிகளும் இரண்டும்கெட்டான்களும் புதிய நண்பர்களாவும் ஆகிவிட்டனர். பழைய வாய்பாடுகள், தலைகீழாகிவிட்டன. தன்னொடு காலங்காலமாய் நண்பனாயிருந்த பாக்கித்தானை அமெரிக்கா ஈவிரக்கமின்றி கழற்றிவிட்டுவிட்டது. காசுமீர மக்களின் தேசிய இன வேட்கைக்குப் பச்சையாக இரண்டகம் செய்துவிட்டு — அம் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மதவண்ணத்தைப் பூசிவிட்டு — இந்தியாவும் பாக்கித்தானும் காசுமீரைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வதையே தீர்வாக முன்வைக்கத் தொடங்கிவிட்டது! இந்திய சந்தைக்காக ஏங்கி, பாக்கித்தானை அமெரிக்கா நட்டாற்றில் விட்டதற்குக் காரணம், அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை யூதமயமானதன் விளைவேயாகும். இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்கப் புறப்பட்டுவிட்டது அமெரிக்கா!

அமெரிக்கா ஒரு பெரிய மார்வாடி. அதற்குச் சந்தை நலன்கள்தான் பெரிது. இதை ஒப்புக்கொள்கிறோம். உலகமயமாக்கம் என்னும் அதன் பேராசை, ஒடுக்குண்ட தேசிய இனங்களின் போராட்டங்களை ஒரு பெரிய தடையாகக் கருதுகிறது. அதனால் தான், தேசிய விடுதலை இயங்கங்கள் எல்லாம் கொள்ளிவாய்ப் பேய்களாக — அரட்டல் வெளிப்பாடுகளாக — அதன் கண்ணுக்குத் தெரிகின்றன.

## இயற்கைக்கு மாறானது

ஆனால், அரசத்தந்திரத்தின் அரிச்சுவடியையே அது மறந்துவிடுகிறதே! நாடும் வீடும் ஒன்றின் ஊடாக மற்றொன்றென இணங்கி வாழ வேண்டும். அதே போல், உலகும் நாடுகளும்கூட ஒன்றின் வழியாக மற்றொன்றென இயங்கியல் வழியில் நிற்க வேண்டும். இந்த இயல்புநிலை கெட்டு நாடுகளை மிஞ்சி உலகம் ஒருதலையாய் வீங்கினால், உலகில் அமைதி கெடும்; உலகம் அழியும். நான்காம் உலக நாடுகளுக்கும் மூன்றாம் உலக அரசுகளுக்கும் இடையிலான முரண்பாடோ, நாட்டுக்கும் வீட்டுக்கும் என்றும் உலகுக்கும் நாடுகளுக்கும் என்றும் இணக்கமாக இருக்க வேண்டிய முரண்பாடு அன்று. மாறாக, அது பல நேரங்களில் பல இடங்களில் பகைத் தன்மை கொண்டிருப்பதே கண்கூடு. இந்த உலகியல் மெய்ம்மை யூதமயமான அமெரிக்க அயலுறவுத் துறையின் காமாலைக் கண்களுக்குத் தெரியவில்லை.

உருசியா, சுலாவிய இனவெறி பிடித்த வல்லரசு. ஆரியர் வழியினர் என்னும் காழ்ப்பு உருசியரின் அடிமனத்தில் உண்டு. இதனால்தான், உருசியாவைப் பொறுத்த வரையில் அது தமிழருக்கும் தமிழரின் தேசிய இன ஓர்மைக்கும் எதிராக என்றுமே வரிந்து கட்டிக்கொண்டு இந்திய வட்டகை வல்லரசைக் குருட்டுத்தனமாக ஆதரித்து வந்துள்ளது. எதிரிக்கு எதிரி நண்பன் என்னும் கூற்று தமிழரைப் பொறுத்த வரையிலும் பொய் என்பது பனிப்போர்க் காலத்திலேயே விளங்கிவிட்டது. தமிழனைப் பொறுத்த வரையில், எதிரிக்கு எதிரியும் எதிரிதான். ஆனால், உலக மார்வாடியான அமெரிக்காவுக்கோ அயலுறவுக் கொள்கையில் நிலையான காழ்ப்புகள் இருக்க வேண்டிய தேவை இல்லை. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பீடித்துள்ள யூதப்பேய் நெடுநாள் நீடிக்கவும் வாய்ப்பில்லை. எல்லா இடங்களிலும் யூதக்கிழவிக்கு யாசர் அராஃபத்துகளாய்க் கிடைத்துவிட மாட்டார்கள்.

அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கையின் யூதமயமாக்கத்தால், அந்த வல்லரசு மிகப் பெரிய தோல்விகளைக் காணப்போவது மட்டும் உறுதி. நான்காம் உலக நாடுகளின் விடுதலை எழுச்சிகள், அந்த யூதமயமாக்கத்தைச் செல்லாக் காசாகச் செய்யப் போவது திண்ணம். அந்த யூதக் கிழவிக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், தமிழீழம் மலராமல் போய்விடுமா என்ன? யாழ்ப்பாணத்தில் சிக்கித் தவிக்கும் சிங்களப் படைகளை மீட்க, இசுரேல் வழியாகப் புதுப்புதுப் படைக்கலங்களை அளிக்கத் துணை நின்றவரும் இந்த யூதக் கிழவிதானே? இருந்தும், சிங்களப் படைகள் பெரிதாக என்ன செய்து கிழித்து விட்டன?

எது எப்படியோ, ஈழத்து எல்லாளனுக்கு ஒன்று தெளிவாகத் தெரியும். "அமெரிக்கனோ வேறு எவனோ நண்பனாயிருந்தால் என்ன பகைவனாயிருந்தால் என்ன? நான் என் சொந்த மக்களைச் சார்ந்து சொந்தக் காலில் நிற்பேன்!" எனச் சூளுரைத்து ஓயாமல் படைநடத்தும் ஈடில்லாப் போராளி அவன்! பிற நாட்டு விடுதலைப் போர்களுக்கெல்லாம் பின்புலம் என்னும் நிலப்பரப்பு இருக்கும். தமிழீழ விடுதலைப் போருக்குத் தமிழ்நாடு மட்டுந்தான் பின்புலம். அந்தத் தமிழ்நாடும் வடுக, இந்தியச் சூழ்ச்சிகளால் அந்த வரலாற்றுப் பங்கை ஆற்றாமல் தடுக்கப்பட்டு வரும் பொருந்தாச் சூழலிலும், அதை ஒரு பெரிதெனக் கொள்ளாது விடுதலைக் கடனில்

www.tamilarangam.net

கண்ணும் கருத்துமாய் இருக்கும் வரலாற்று நாயகன் அவன். அதனால்தான், சின்னஞ்சிறு ஈழநாடு இன்று உலகமே கண்கொட்டாமல் பார்த்து மலைத்து வியக்கும்வண்ணம் வீடுகட்டி ஆடிவருகின்றது.

(பின்னர் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இடையில் சொல்லப்பட்ட விளக்கம்)

(பின்னர் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடையிறுத்தபோது, இடையில் சொல்லப்பட்ட விளக்கம்)

தமிழ்நாட்டு விடுதலை ஈழ விடுதலைக்குக் கேடு செய்யுமோ என்ற அச்சத்தைச் சிலர் கேள்விக் கணை யாகத் தொடுக்கின்றனர். உள்ளபடியே. தமிழக விடுதலை தமிழீழ விடுதலைக்கு எந்தவொரு கெடுதலும் செய்யாது.

இந்த ஐயத்திற்கே காரணம் செல்வாக்கு மண்டிலங்கள் (Spheres of Influence) என்னும் கோணங்கிக் கோட்பாடுதான். மேலைநாடுகள் மிக நெடுங்காலமாக அதைக் கடைப்பிடித்து வருகின்றன.

நாடுகள் சிறியனவாயினும் பெரியனவாயினும், எல்லாம் சமம் என்னும் உலகநாடுகள் அவையின் கோட்பாட்டிற்கே அது முரணானது. இந்தச் செல்வாக்கு மண்டிலக் கோட்பாட்டை அமெரிக்காவும் பிற ஐரோப்பிய நாடுகளும் பச்சையாகக் கடைப்பிடித்து வருவதைக் கண்டும், அந்த உலகநாடுகள் அவை அதைக் கண்டும் காணாதது போல் இருப்பது அதன் போலித்தனத்தைக் காட்டுகிறது. அதன்படி, இந்தியா, தெற்காசியாவின் பேட்டைக் காடையன்.

இந்தியாவின் புவி மேலாண்மையை ஏற்றுக் கொள்வது என்பது சட்டியிலிருந்த மீன் எரியும் நெருப்பில் விழுவதைப் போன்றது. சிங்களனின் இனவெறிக் கொடுமைகளிலிருந்து தப்பி, இந்தியாவென்னும் அதைவிடப் பெரிய — கொடிய — இனக் கொடுங்கோலனுக்கு அடிமையாவதையே அது குறிக்கும். இன்றைய அடிமைத் தமிழகத்தின் தமிழ் மக்கள் என்னதான் வடவனுக்கு அடிமையுண்டு இருந்தபோதும், சின்னஞ்சிறிய அளவுக்கேனும் தமிழகத் தமிழர்கள் ஈழத் தமிழர்க்குத் தோள் கொடுத்து வருகின்றனர். அத்தகைய அடிமைத் தமிழர்களின் தமிழகம் இந்திய வல்லரசின் கொடும் பிடிகளிலிருந்து விடுத்தலை பெற்றால், அதைவிடப் பெரிய பாதுகாப்பு தமிழீழத்தின் இறையாண்மைக்கு இருக்க முடியாது.

தமிழ்நாட்டுத் தமிழரின் தேசிய இனவிடுதலைக்குத் தோள்கொடுப்பதென்பது ஒரு புறம் இருக்கட்டும். வெறும் வாயளவில் தமிழகத் தமிழரின் தேசிய விடுதலைக்குத் தமிழீழத் தமிழர்கள் ஒப்புக்குக் குரல் கொடுத்தாலேயே தில்லி வல்லரசுக்கு பெரிய எரிச்சலூட்டி தமிழழப் போரில் இந்தியா நேரடியாகத் தலையிட வைத்துவிடும் என்பது ஒரு குழப்பம். இந்தக் குழப்பத்திலிருந்து விடுபட வேண்டும். விடுதலை பெற்ற தமிழகம் தமிழீழத்தின் தன்னுரிமைக்கும் இறையாண்மைக்கும் நல்ல பாதுகாப்பு அரணாக இருக்கும் என்பதைக் காலம் காட்டும்.

இத்தனைக்கும், தமிழீழப் போராளிகளிடமிருந்து தமிழ்நாட்டு விடுதலை விரும்பிகள் எந்த உதவியையும் எதிர்பார்க்கவில்லை. அத்தகைய உதவி கிடைக்கவில்லையே என்று அவர்கள் குற்றம் சாட்டவும் போவதில்லை. ஏனெனில், நிலைமை அவர்களுக்குத் தெரியும். ஆயினும், அவர்கள் வேண்டுவதெல்லாம் ஒன்றே! தமிழீழ விடுதலைக்குத் தடையாக்கவும் முரணாகவும் தமிழகத் தமிழரின் தேசிய விடுதலை இருக்கும் என்னும் வேண்டாத ஐயத்தை அவர்கள் கைவிட்டாலே போதும். இதுவே எம்முடைய பணிவான வேண்டுகோள்.

வியத்நாம் தன் தேசிய விடுதலைக்குப் பல் லாண்டுகள் கடுமையாகப் போராடியது. 1960களில் நானே முன்னிலை வகுத்துப் பெங்களூரில் அமெரிக்கா வியத்நாமின்மீது இழைத்து வந்த போரை எதிர்த்துச் சில போராட்டங்களை நடத்தினேன். அதற்காக 1965 ஆகத்து 9 அன்று கருநாடகக் காவல் துறை கட்ட விழ்த்துவிட்ட தடியடி வன்முறையால் முட்டிக்கு முட்டி தட்டப்பட்டுத் தளைப்படுத்தப்பட்டேன் வழக்கும் பல ஆண்டுகள் நீடித்தது. ஆனால், அதே வியத்நாம் இன்று இந்தியச் சிறையில் அடிமையுண்ட தேசிய இனங்களுக்கு எதிராக இந்திய வல்லரசுக்கு உதவ முன்வந்துள்ளதைக் கண்டு மலைத்து நிற்கிறேன். அண்மையில் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சரான ஜார்ஜ் பெர்னாண்டசு வியத்நாமுக்குச் சென்றிருந்தார். இந்தியாவில் தேசிய விடுதலைக்காகப் போரிட்டுவரும் தேசிய இனங்கள் நடத்தி வரும் கரந்தடிப் போர்களை எப்படி எப்படியெல்லாம் முறியடிப்பது எனப் பாடம் சொல்லித் தர அந்த வியத்நாம் அப்போது இணங்கியதாம்!

யப்பானுக்கு எதிராக மிக நீண்ட தேசிய விடுதலைப் போரை நடத்திய சீனம், இன்று தமிழீழத் தேசியப் போரை ஒடுக்குவதற்குக் கப்பல்களையும் படைக்கருவிகளையும் வழங்கி வருகிறது! என்னே தலைகீழ் மாற்றம் பாருங்கள்! செங்கொடி விரித்த அதே சீனம், திபேத்தியர் போன்ற தேசிய இனங்களை ஒடுக்கி வருகிறது. தேசிய இனங்களுக்குத் தனிநாட்டுரிமை (the right of self-determination) என்னும் உயரிய கொள்கையை உலகுக்குப் பாடம் படித்த உருசியா, செச்சனிய நாட்டையே வன்போர் வழியாகப் பிடித்துக்கொண்டு, தானே நேரடியாக ஆளத் தலைப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலையை ஒடுக்குவதற்கு முந்திரிக்கொட்டை போல் முந்திக் கொண்டு, சந்திரிகாவிற்குத் தூது விட்டது. இந்த உருசியாவிற்குத் தமிழீழ விடுதலைப் போர் எந்த வகையில் கேடாகிவிடப் போகிறது? எல்லாமே அந்த இழவெடுத்த செல்வாக்கு மண்டிலக் கோட்பாட்டால் வந்த வினைகள்தாம்!

நான் 1980ஆம் ஆண்டில் சீனம் சென்றிருந்தேன். அப்போது, நான் கருநாடக மாநிலத்தின் இந்திய-சீன நட்புறவுக் கழகத்தின் செயலராக இருந்

www.tamilarangam.net

## பாம்பின் கால் பாம்பறியும்!

அண்மையில் திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகத்தின் நிறுவுனர் காமாட்சி நாயுடு விசய் தொலைக்காட்சிக்கு நேருரை வழங்கினார். அவருடன் எழுத்தாளர் சுதாங்கன் உரையாடினார். அந்நேருரையில் காமாட்சி நாயுடு, தன்னைத் தமிழன் என்று கூறிக்கொள்ளும் நடிகர் விசயகாந்தும், ம.தி.மு.க வின் பொதுச் செயலாளர் வைகோவும் அமைச்சர் ஆற்காடு வீராச்சாமியும் உண்மையில் தெலுங்கர்கள் என்றும் அவர்கள் தன்னுடைய உறவினர்கள் என்றும் கூறினார். விசயகாந்த் நடிக்க வந்த காலத்தில் அவர்க்கு அணுக்கமாக இருந்து அவரைத் திரைப்படத்துறையில் உயர்த்தியவர்கள் தெலுங்கர்களே என்றும் வைகோ, கட்சி தொடங்கியபோது அவர்க்குத் துணைத்தரவாக இருந்து எல்லா உதவிகளையும் நல்கியவர்கள் தெலுங்கர்கள் என்றும், வைகோவிற்காக திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகத்தின் தலைமைப்பதவி வெற்றிடமாகக் காத்திருக்கிறது என்றும் கூறினார்.



காமாட்சி நாயுடு

மேலும், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் நெஞ்சில் இடம் பிடித்த தெலுங்கர்கள் தேர்தல் நேரத்தில் தொகுதியிலும் இடம் பிடிப்பார்கள் என்றார். நேயர் ஒருவர் தொலைப்பேசியில், "தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம் என மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டுவிட்டன. இனி தமிழ்நாட்டில் தெலுங்கர்கள் கட்சி தொடங்கலாமா? என வினவினார். அதற்கு நாயுடு, "தமிழ்நாடு குடிநாயக (இளிச்சவாயன்) மாநிலம், இங்கு கன்னடர், தெலுங்கர் பெருவாரியாக வாழ்கின்றனர்! எனவே இங்கு தெலுங்கர்கள் கட்சி தொடங்கலாம்" என்று பேசினார்.

ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிய கதையாகத் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டு தமிழர் செல்வத்தைச் சுரண்டிய தெலுங்கர்கள் தொகுதியைப் பிடிப்பேன், ஆட்சியைப் பிடிப்பேன் என்கிறார்கள். "பாம்பின் கால் பாம்பறியும்" என்பதுபோல தெலுங்கன் தன் இனத்தை அடையாளம் கண்டுகொள்கிறான், கட்சி தொடங்குகிறான். தெலுங்கர்களெல்லாம் கட்சியைக் கடந்து அக்கட்சிக்கு பணமும், துணைத்தரவும் அளிக்கிறார்கள். ஆனால், தமிழரோ திராவிடமாயையில் சிக்கிக் கொண்டு தமிழ்நாட்டைத் திராவிடநாடாக்கும் முயற்சிக்கு இடம் கொடுக்கின்றனர்.

"காட்டிலும்", நாட்டிலும் தமிழின ஓர்மை பொங்கும் இக்காலத்தில், "தமிழ்நாட்டில் அயலார்க் கினி என்ன வேலை? தாவும் புலிக்கொரு நாயெந்த மூலை?" எனும் பாவேந்தரின் சொற்களுக்கு புதுவேகம் கொடுக்க தமிழர் அணியமாகிவிட்டார் என்றுதானே கருதவேண்டும்!

தேன். அதனால், சீன அரசின் விருந்தினன். அப்போது, அங்குள்ள தலைவர்களிடம் தமிழக விடுதலைக்கு உதவ வேண்டும் எனச் சொல்லிய போதெல்லாம், அவர்கள் சட்டை செய்யவில்லை. பின்னர், 1983 இலங்கை இனப்படுகொலைக்குப்பின் பெங்களூர் வந்த சீனத் தூதுக்குழுக்களிடம் எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழீழத் தமிழர்க்கு எதிராகச் சிங்கள அரசுக்கு உதவ வேண்டாமென அவர்களைக் கெஞ்சியே பார்த்தேன். அவர்கள் என் வேண்டுகோளைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இதனால்தான், சீனமும் வேண்டாம், அதனுடன் உறவும் வேண்டாம் என்று சொல்லி, இந்திய-சீன நட்புறவுக் கழகத்திலிருந்து முழுமையாக விலகிக் கொண்டேன்.

இந்தியாவிற்கும் சீனத்திற்கும் இடையில் நல்லுறவு வளர்வதென்பது குறிப்பாகத் தமிழர் இனத்திற்குக் கேடாகவே அமையும் என்பதை இப்போது மிகத் தெளிவாக உணர முடிகிறது. அவ்விரு நாடுகளுக்கு இடையில் உரசல் இருந்தால்தான், நெடிய இருநாட்டு எல்லைகளிலும் பெரும் படைகள் குவிக்கப்பட்டிருக்கும். இதனால், இந்தியச் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் ஒடுக்குண்ட தேசிய இனங்களின்மீது இந்திய வன்படைகளை ஏவி விடுவது குறையும். இப்போதுதான் பாடம் தெளிவாகிறது. இதுவே நான் சொல்ல வந்த விளக்கம்.

சிங்களர்க்கு வெறும் 100 மில்லியன் டாலர் மட்டும் தான் உதவி என்றார். திரைமறைவில் இன்னொரு 100 மில்லியன் டாலர் சந்திரிகா இந்தியா விடமிருந்து படைக்கருவிகளை வாங்க வழங்கப்படும் போலும்!

சந்திரிகாவுக்கு உதவ இந்தியா முதலில் காட்டிய தயக்கத்திற்கு, இந்தியப் பீடைகள் தமிழீழத்தில் வாங்கிய உதை மட்டுமே காரணமன்று. இதற்கு முன்பிருந்த வாசபேயி அரசை ஜெயலலிதாவும் சோனியாவும் சேர்ந்து கவிழ்க்கச் சந்திரிகா பெரும் பண உதவியை செய்ததும் இன்னொரு காரணம். ஆனாலும், ஆரிய அரத்த உறவு விடுமா? பொத்துக் கொண்டு வழிந்தது நாள் கழித்து அந்த இனப்பாசம்! ஊமையனைவிட உளறுவாயனே மேல் என்பது பழமொழி. அந்த வழியில், 'செக்'கில் மாட்டைக் கட்டச் சொல்லிக் கருணாநிதி உளறினார்! உதறல் எடுத்தது இந்தியனுக்கு! சிங்களனின் இணையாண்மை தான் பெரிதாம். தமிழீழத் தமிழரைக் கொன்று சிங்களன் பேயாடுவதைப் பற்றிக் கவலை இல்லையாம். இதுதான் மாந்தநேயமாம்!

பாக்கித்தான் இந்தியாவின் பகை நாடு. ஆனால், அந்தப் பாக்கித்தான் தமிழரைக் கொல்லச் சிங்களன் கேட்ட வரத்தை — பல்குழல் தகரிகளையும் பெரிய பெரிய படைக்கருவிகளையும் — ஏற்றிக் கொண்டு இந்திய வான்வெளியில் பறக்க இந்தியாவே பச்சைக்கொடி காட்டியது என்னும் குட்டும் வெளிப்பட்டுவிட்டது! தமிழனை ஒழிப்பதென்றால், சிங்களனும் இந்தியனும் பாக்கித்தானியனும் ஒன்றே என்பது இன்னுமா விளங்கவில்லை?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராச்குமாருக்காக கண்கலங்கி பதறிப் போகும் இரசினிகாந்து 1991ல் தமிழர்கள் கொல்லப் பட்டபோது பதறவில்லை! கர்நாடக அரசு தமிழ்ப் பள்ளிகளை இழுத்து மூடியபோது குரல் கொடுக்கவில்லை! காவிரியில் கர்நாடகம் தண்ணீர் விட மறுத்த போது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை! மணிரத்தினத்தின் வீட்டுக்கருகில் குண்டு வெடித்தால் குமுறுவார்! படத்தில்தான் பாட்டாளி, தமிழன், ஒரு துளி வியர்வை! இயல்பு வாழ்வில் ...இனவெறி! ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களுக்குக் கொண்டாட்டம் என்று ஒரு முறை நம்மைக் குட்டிக் கொண்டாலும் தகும்! - ஆசிரியர்

# இவர்தான் இரசினிகாந்த்!

## இயற்பெயர் : சிவாசிராவு


தமிழர்களை அழித்தொழிக்க வேண்டும் என்று வெறிநாய்கள் போலச் சுற்றித் திரியும் ஒரு அமைப்புதான் வாட்டாள் நாகராச் நடத்தும் கன்னடச் சளுவளி இயக்கம். இந்த இயக்கத்தில் இரசினிகாந்தும் அவரது குடும்பத்தினரும் வெறிகொண்ட உறுப்பினர்கள் என்பது அனைவரும் அறிய வேண்டிய ஒன்று.

1992ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 4ஆம் நாள் 'சுடச் சுடச் செய்தி' (1:22) எனும் ஏட்டிற்கு கன்னடச் சளுவளி இயக்கத்தின் தலைவர் வாட்டாள் நாகராச் ஒரு பேட்டி கொடுத்திருந்தார். அப்பேட்டியின்போது அவரிடம் "இரசினிகாந்து படை நடத்தி தமிழர்களைக் காப்பாற்றுவேன்" என்கிறாரே என்று வினவியபோது, அவர் சிரித்துக் கொண்டே பதிலளித்தார். இதோ அந்தப் பதில் அப்படியே:

"இரசினிகாந்து நம்ம பையன்தான். அவங்க அப்பா இராணாஜிராவு இங்கு காவல்துறையில் ஏட்டாக பணிபுரிந்தவர். அப்போது அவரது குடும்பத்தை எனக்கு நன்றாகத் தெரியும். அப்போது இவரது பெயர் சிவாஜிராவுதான். இவர் ஒரு பணிமனையில் மூட்டை தூக்கும் வேலை செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் நான் "கன்னடப் பாதுகாப்பு இயக்கம்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி நடத்திக் கொண்டிருந்தேன். இதில் இந்த சிவாஜிராவு (இரசினிகாந்த்) தீவிர உறுப்பினர். இங்கு ஏதாவது தமிழ்க் கடைகளை அடிக்கிறோம் நொறுக்குகிறோம் என்றால் அதற்கு முதல் ஆளாக சிவாஜிராவுதான் நிற்பான். தமிழர்களைக் கண்டாலேயே இரசினிகாந்துக்குப் பிடிக்காது. 'காஞ்சித் தலைவன்' என்ற ஒரு திரைப்படம் பல ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு வந்தது. அப்போது இரசினிகாந்த் பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்து வந்தார். அந்தப் படத்தை சில திரையரங்குகளில் திரையிட்டிருந்தார்கள். அந்தப் படத்தில் கன்னட நாட்டு மன்னனைப்பற்றி இழிவான வசனங்கள் எழுதப்பட்டிருந்ததால் இங்கு ஒரு சிக்கல் வந்தது. உடனே தமிழ் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. அப்படி தமிழர் கடைகளை அடித்து நொறுக்குவதில் முதலில் நின்றது இரசினிகாந்துதான். இப்போதுகூட அவர் எங்கள் இயக்கத்தில் உறுப்பினர்தான். திரைப்படம் எடுக்க பெங்களூர் பக்கம் வந்தாரென்றால் எங்களை வந்து பார்ப்பார். ஏதாவது உதவி செய்வார். சொந்த கட்டடம் வேண்டும் என்று சொல்லியிருந்தோம். அதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை தருவதாகச் சொல்லியிருக்கிறார். அவருடைய அண்ணன் சத்தியநாராயணா எங்கள் இயக்கத்தில் ஒரு அமைப்பாளர். அவரது பிள்ளைங்க, 'கன்னட இளைஞர் முன்னணி' என்ற ஒரு அமைப்பை வச்சிருக்காங்க. இரசினிகாந்தின் குடும்பமே இந்த அளவிற்கு ஈடுபாடு காட்டும்போது, கர்நாடகத்திற்குப் படையெடுத்து வருவேன் என்பது வேடிக்கையாக இருக்கிறது. ஏதோ அவர் தன்னுடைய படம் தமிழ்நாட்டில் ஓட வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு இரட்டை வேடம் போடுகிறார் என்று நான் கருதுகிறேன். இரசினியின் இந்த அறிக்கையைப் பார்த்ததும் நம்முடைய ஆட்கள் அவருடைய அண்ணனை சந்தித்து விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அவரும் உண்மை நிலையைக் சொல்லியிருக்கிறார். இரசினிகாந்து நம்ம பையன். அவரை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!"

## இரசினிகாந்த் பற்றி வினுச் சக்ரவர்த்தி

வினுச்சக்ரவர்த்தி ஆறாம்திணைக்கு ஒரு செவ்வி கொடுத்திக்கிறார். இரசினிகாந்த் குறித்தும் அதில் குறிப்பிடுகிறார். இதோ அவர் சொல்வது:



"கதை வசன கர்த்தாவாகவே அறிமுகமானேன். யாரையும் கெஞ்சி வாய்ப்பைப் பெறமாட்டேன். என் திறமை மேல எனக்கு நம்பிக்கையிருக்கு. இப்ப தமிழ் சினிமாவில் கதைக்குப் பஞ்சம் இருக்கு. ஆனாலும் யாரும் நம்மகிட்ட வந்து கதை கேட்க மாட்டாங்க. எந்தக் கேசட்டைப் பார்த்தாவது காப்பியடிப்பாங்களே தவிர, கதை கேட்க மாட்டாங்க.

ஏன், என்னோட நண்பராகப் பழகிக் கொண்டிருக்கும் ரஜினிகூட கதை என்று வந்தால் ஆந்திராவிற்கும், கர்நாடகத்திற்கும்தான் போகிறார். எங்கிட்ட கதை இருக்குன்னு அவருக்குத் தெரியும். ஆனால் கதை கேட்க மாட்டார். எல்லாப் பேட்டிகளிலும் நான் கதை வச்சிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இதுக்குமேல ஒரு வாய்ப்பு கொடுங்க என்று போய் கெஞ்சவா முடியும்? "ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுண் தங்கக்காசு கொடுத்தது தமிழ் அல்லவா?" அப்படின்னு சொல்லுற ரஜினி, ஒரு கிராம் தங்கக்காசுகூட நம்ம காதாசிரியர்களுக்கு கொடுக்க மாட்டேன்னா எப்படி? அவருக்கு நண்பர்கள் யாருன்னு பார்த்தீங்கன்னா கன்னடத்து ராச்குமாரும், ஆந்திரத்து மோகன் பாபுவும்தான். அவருக்கு இங்கே நண்பர்களே இருக்க மாட்டாங்க! (நன்றி : ஈழமுரசு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மோதிர விரல்களுக்கு விலங்கிடப்பட்ட கை எழுதுவது

த.ரெ. தமிழ் மணி
திருவாரூர்

அகப்படுத்திக் கொண்டவன் விட்டின்
சொந்தக் காரனுக்கு
கழிவறைக் கிண்ணத்தில் உணவிட
அதை வாங்கித் தின்பதுதான்
இறையாண்மை எனில் அது-
குறையாண்மையாய் போகட்டும்

சந்திரிகாவின் கண்களில்
தூசி விழுந்தபோது
தீவிரவாதம் என்று
துடித்தவர்களே....
மீனவக் குடும்பங்களின்
கண்களையே குருடாக்கியபோது
உங்களின் ம(னி)த நேயம்
எவனிடம் கோவணம் திருட
குடி பெயர்ந்தது?

தீவிரவாதம் என்கிறீர்...
செத்த சிங்களரை
செஞ்சிலுவையிடம்
ஒப்படைப்பது தீவிரவாதமா?
குடிசையில்லா தமிழன்மீது
குண்டு போடுவது
தீவிரவாதமா?

சிங்கள ஆதிக்கத்தின்கீழ்
ஈழத்தையும்
கொழும்பையும்
இணைக்கத் துடிக்கிற
இந்திய மனநோயாளிகளே...
முதலில்
பாக்கிசுதான் ஆதிக்கத்தின் கீழ்
இந்தியாவையும்
பாக்கிசுத்தானையும்
இணைக்க வேண்டியதுதானே?

தனிஈழம் அமைந்தால்
தமிழகம் பிரிந்துவிடுமாம்
தமிழ்ச் சோற்றில்
சிங்களன் மண்ணையள்ளி வைத்தான்
ஈழம் பிரிகிறது!
உங்களுக்குப் பயம் வருகிறதே...
தமிழகத் தமிழனை
அப்படித்தான் செய்கிறீர்களா?

இலங்கைச் சிக்கலுக்கு
அமைதியால்தான்
தீர்வு காணமுடியும்
என்கிற நீங்கள்
ஏன் இலங்கைக்கு
துமுக்கிகளை
தூக்கிக் கொண்டு
ஓட நினைக்கிறீர்கள்?

உலகப் பொதுமறை என்பீர்
வள்ளுவர் சிலை திறக்க மறுப்பீர்
'செய்கிந்து' என்று நரம்பு புடைக்க
கத்தச் சொல்வீர்
காவிரியும் - பெரியாறும்
கவணை போட்டு தடுப்பீர்...

காவல் காத்து
மீந்தவற்றைத் தின்று
இந்திய விட்டைச் சுற்றிவர
நாய்களா நாங்கள்?

உங்கள் தேசியக் கொடியின் கீழ்
'செய்கிந்து' சொல்கிறோம்
நீங்கள் தருகின்ற
கொடிநாள் கொடிகளை
வெற்று நெஞ்சில்
அரத்தம் துளிர்க்க
குத்திக் கொள்கிறோம்

தில்லியில் மட்டுமே
மழை பெய்ய
வெற்றுத் தாளில்
கையெழுத்து போட்டு
தருகிறோம்...

நீங்கள்
உரிமைப் போரை மட்டும்
கேவலப்படுத்த
ஊத்தை வாய்களைத்
திறக்காதீர்...

காயம் பட்டவர்களுக்கு
மருந்து கொடுக்க
வக்கில்லாத நீங்கள்
கத்திகளாய் ஏன்
கீற நினைக்கிறீர்கள்?

அவர்களின் புண்கள்
குணமாகும் முன்
நோய் கிருமிகளை அழிக்கப்
புறப்பட்டுவிட்டார்கள்
குறுக்கே போனால்
நீங்களும் கிருமிகள்தான்!